**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

सत्यमेव जयते

# மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மம் மற்றும் அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவுநோய் அறிகுறிச் (தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம், 2017

**(எண் 16/2017)**

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு )

# The Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome (Prevention and Control) Act, 2017

**(No. 16 of 2017)**

**(As on 31st October, 2023)**

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மம் மற்றும் அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவுநோய் அறிகுறிச்(தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம், 2017

(எண் 16/2017)

# The Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome (Prevention and Control) Act, 2017

**(No. 16 of 2017)**

# PREFACE

This edition of the Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome (Prevention And Control) Act, 2017(No. 16 of 2017) as on 31st October 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 17th July, 2023 on Pages from 131 to 180 .

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
17th July, 2023. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மம் மற்றும் அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவுநோய் அறிகுறிச் (தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம், 2017 (எண் 16/2017) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2023, ஜூலை 17 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 131 முதல் 180 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

| | |
|---|---|
| புது தில்லி, | (ஒப்பம்)...... |
| 17, ஜூலை 2023. | இந்திய அரசு செயலாளர். |

# THE HUMAN IMMUNODEFICIENCY VIRUS AND ACQUIRED IMMUNE DEFICIENCY SYNDROME (PREVENTION AND CONTROL) ACT, 2017
**(No. 16 of 2017)**

## CONTENTS

**Sections** **Pages**


**CHAPTER I**
**PRELIMINARY**

1. Short title, extent and commencement. 2
2. Definitions. 2

**CHAPTER II**
**PROHIBITION OF CERTAIN ACTS**

3. Prohibition of discrimination. 10
4. Prohibition of certain acts. 12

**CHAPTER III**
**INFORMED CONSENT**

5. Informed consent for undertaking HIV test or treatment. 12
6. Informed consent not required for conducting HIV tests in certain cases. 12
7. Guidelines for testing centres, etc. 13

**CHAPTER IV**
**DISCLOSURE OF HIV STATUS**

8. Disclosure of HIV status. 13
9. Disclosure of HIV-positive status to partner of HIV-positive person. 15
10. Duty to prevent transmission of HIV. 16

**CHAPTER V**
**OBLIGATION OF ESTABLISHMENTS**

11. Confidentiality of data. 16

# மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மம் மற்றும் அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவுநோய் அறிகுறிச் (தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம், 2017

**(எண்16/2017)**

**பொருளடக்கம்**


**பிரிவுகள்** **பக்கங்கள்**

**அத்தியாயம் I**

**முன்னுரை**

1. குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். 2
2. பொருள் வரையறைகள். 2

**அத்தியாயம் II**

**குறித்த சில செயல்களுக்குத் தடை**

3. வேற்றுமை காட்டுதலுக்குத் தடை. 10
4. குறித்தசில செயல்களுக்குத் தடை. 12

**அத்தியாயம் III**

**வெளிப்படுத்தப்பட்ட இசைவு**

5. எச்ஐவி பரிசோதனை அல்லது சிகிச்சை தொடங்குவதற்காக வெளிப்படுத்தப்பட்ட இசைவு. 12
6. குறித்தசில நேர்வுகளில் எச்ஐவி பரிசோதனை நடத்துவதற்கு வெளிப்படுத்தப்படும் இசைவு தேவைப்படுவதில்லை. 12
7. பரிசோதனை மையங்கள் முதலியவற்றிற்கான வழிகாட்டு நெறிகள். 13

**அத்தியாயம் IV**

**எச்ஐவி தொற்றுநிலை பற்றிய வெளிப்படுத்துகை**

8. எச்ஐவி தொற்றுநிலையை வெளிப்படுத்துதல். 13
9. எச்ஐவி தொற்றுநிலை உறுதி பற்றி எச்ஐவி உறுதியான நபருடைய கூட்டாளிக்கு வெளிப்படுத்துதல். 15
10. எச்ஐவி பரவுவதைத் தடுப்பதற்கான கடமை. 16

**அத்தியாயம் V**

**நிறுவனங்களுக்குள்ள கடமைப்பாடு**

11. தரவின் இரகசியம். 16

12. HIV and AIDS policy for establishments. 17

## CHAPTER VI

## ANTI-RETROVIRAL THERAPY AND OPPORTUNISTIC INFECTION MANAGEMENT FOR PEOPLE LIVING WITH HIV

13. Central Government and State Government to take measures. 17

14. Anti-retroviral Therapy and Opportunistic Infection Management by Central Government and State Government. 17

## CHAPTER VII

## WELFAREMEASURES BY THE CENTRAL GOVERNMENT AND STATE GOVERNMENT

15. Welfare measures by Central Government and State Government. 18

16. Protection of property of children affected by HIV or AIDS. 18

17. Promotion of HIV and AIDS related information, education and communication programmes. 18

18. Women and children infected with HIV or AIDS. 18

## CHAPTER VIII

## SAFE WORKING ENVIRONMENT

19. Obligation of establishments to provide safe working environment. 19

20. General responsibility of establishments. 20

21. Grievance redressal mechanism. 20

## CHAPTER IX

## PROMOTION OF STRATEGIES FOR REDUCTION OF RISK

22. Strategies for reduction of risk. 20

## CHAPTER X

## APPOINTMENT OF OMBUDSMAN

23. Appointment of Ombudsman. 22

12. நிறுவனங்களுக்கான எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் கொள்கை. 17

**அத்தியாயம் VI**

**எச்ஐவியுடன் வாழ்ந்து வரும் மக்களுக்கான நுண்மநோய்த் திரும்பல் எதிர்ப்பு சிகிச்சை மற்றும் மருந்து காரணமாக நோய்த் தடுப்பாற்றல் குன்றியவர்களுக்கு**

13. மைய அரசும் மாநில அரசும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல். 17

14. நுண்மநோய்த் திரும்பல் எதிர்ப்பு சிகிச்சையும் நோய்த் தடுப்பாற்றல் குன்றியவர்களுக்கு நோய்த் தொற்று மைய அரசாலும் மாநில அரசாலும் மேலாண்மை செய்யப்படுதல். 17

**அத்தியாயம் VII**

**மைய அரசாலும் மாநில அரசாலும் செய்யப்படும் நலப்பாட்டு நடவடிக்கைகள்**

15. மைய அரசாலும் மாநில அரசாலும் செய்யப்படும் நலப்பாட்டு நடவடிக்கைகள். 18

16. எச்ஐவி அல்லது எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் சொத்தினைப் பாதுகாத்தல். 18

17. எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் தொடர்பான தகவல், கல்வி ஆகியவற்றுக்கான தொடர்பு செயல் திட்டங்களை மேம்படுத்துதல். 18

18. எச்ஐவி அல்லது எய்ட்ஸ் தொற்றுள்ள பெண்களும் சிறார்களும். 18

**அத்தியாயம் VIII**

**பாதுகாப்பான பணிபுரியும் சூழல்**

19. பாதுகாப்பான பணிபுரியும் சூழலுக்கு வகை செய்வதற்கு நிறுவனங்களின் கடமைப்பாடு. 19

20. நிறுவனங்களின் பொதுவான பொறுப்பு. 20

21. குறை தீர்ப்பு இயங்கமைவு. 20

**அத்தியாயம் IX**

**ஆபத்தைக் குறைப்பதற்கான செயலூக்க உத்திகளை மேம்படுத்துதல்**

22. ஆபத்தைக் குறைப்பதற்கான செயலூக்க உத்திகள். 20

**அத்தியாயம் X**

**முறைமன்ற நடுவரை அமர்த்துதல்**

23. முறைமன்ற நடுவரை அமர்த்துதல். 22

24. Powers of Ombudsman. 23

25. Procedure of complaint. 23

26. Orders of Ombudsman. 23

27. Authorities to assist Ombudsman. 24

28. Report to State Government.

## CHAPTER XI
## SPECIALPROVISIONS

29. Right of residence. 24

30. HIV-related information, education and communication before marriage. 25

31. Persons in care or custody of State. 25

32. Recognition of guardianship of older sibling. 25

33. Living wills for guardianship and testamentary guardianship. 26

## CHAPTER XII
## SPECIAL PROCEDURE IN COURT

34. Suppression of identity. 26

35. Maintenance applications. 27

36. Sentencing. 27

## CHAPTER XIII
## PENALTIES

37. Penalty for contravention. 27

38. Penalty for failure to comply with orders of Ombudsman. 28

39. Penalty for breach of confidentiality in legal proceeding. 28

40. Prohibition of victimisation. 28

41. Court to try offences. 28

24. முறைமன்ற நடுவருக்குள்ள அதிகாரங்கள். 23

25. முறையீட்டுக்கான நெறிமுறை. 23

26. முறைமன்ற நடுவரின் ஆணைகள். 23

27. அதிகாரஅமைப்புகள் முறைமன்ற நடுவருக்கு உதவுதல் வேண்டும். 24

28. மாநில அரசுக்கு விவரஅறிக்கை.

**அத்தியாயம் XI**

**சிறப்பு வகையங்கள்**

29. உறைவிடத்திற்கான உரிமை. 24

30. திருமணத்திற்கு முன்பு எச்ஐவி தொடர்பான தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு. 25

31. மாநிலத்தின் காப்பிலும் பொறுப்பிலும் உள்ள நபர்கள். 25

32. உடன் பிறந்த மூத்தவரைக் காப்பாளராக ஏற்பளித்தல். 25

33. காப்பாளர் நிலைக்கான மற்றும் விருப்புறுதி வழிக்காப்பாளர் நிலைக்கான வாழ்ந்து வருபவர் காப்புறுதி. 26

**அத்தியாயம் XII**

**நீதிமன்றத்தில் சிறப்பு நெறிமுறை**

34. அடையாளத்தை மறைத்து வைத்தல். 26

35. வாழ்க்கைப்படி உதவிக்கான விண்ணப்பங்கள். 27

36. தீர்ப்புத்தண்டனை விதித்தல். 27

**அத்தியாயம் XIII**

**தண்டனைகள்**

37. மீறுகைக்கான தண்டனைகள். 27

38. முறைமன்ற நடுவரின் ஆணைகளுக்கு இணங்கி நடக்கத் தவறுவதற்கான தண்டனை. 28

39. சட்ட நடவடிக்கையில் இரகசியத்தை மீறுவதற்கான தண்டனை. 28

40. பழிவாங்குவதற்குத் தடை. 28

41. நீதிமன்றம் குற்றச் செயல்களை விசாரணை செய்தல். 28

42. Offences to be cognizable and bailable. 28

**CHAPTERXIV**
**MISCELLANEOUS**

43. Act to have overriding effect. 29

44. Protection of action taken in good faith. 29

45. Delegation of powers. 29

46. Guidelines. 29

47. Power of Central Government to make rules. 30

48. Laying of rules before both Houses of Parliament. 31

49. Power of State Government to make rules and laying thereof. 31

50. Power to remove difficulties. 32

42. குற்றச்செயல்கள் பிடியாணையின்றி கைது செய்வதற்கும் பிணையில் விடுவதற்குமானதாகும். 28

**அத்தியாயம் XIV**

**பல்வகை**

43. சட்டம் மீதூர்ந்தியங்கும் செல்திறம் பெறும். 29

44. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. 29

45. அதிகாரங்கள் ஒப்படைவு. 29

46. வழிகாட்டு நெறிகள். 29

47. விதிகள் செய்வதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம். 30

48. விதிகளை நாடாளுமன்ற ஈரவைகளின் முன்பும் வைத்தல். 31

49. விதிகள் செய்வதற்கும் அவற்றை மாநிலச் சட்டமன்றத்தில் வைப்பதற்குமான அதிகாரம். 31

50. இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். 32

# THE HUMAN IMMUNODEFICIENCY VIRUS AND ACQUIRED IMMUNE DEFICIENCY SYNDROME (PREVENTION AND CONTROL) ACT, 2017

**(No 16 of 2017)**

[20th April, 2017.]

An Act to provide for the prevention and control of the spread of Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome and for the protection of human rights of persons affected by the said virus and syndrome and for matters connected therewith or incidental thereto.

WHEREAS the spread of Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome is a matter of grave concern to all and there is an urgent need for the prevention and control of said virus and syndrome;

AND WHEREAS there is a need to protect and secure the human rights of persons who are **HIV** positive, affected by Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome and vulnerable to the said virus and syndrome;

AND WHEREAS there is a necessity for effective care, support and treatment for Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome;

AND WHEREAS there is a need to protect the rights of healthcare providers and other persons in relation to Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome;

# மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மம் மற்றும் அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவு நோய்அறிகுறிச் (தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம், 2017

**(எண் 16/2017)**

[2017, ஏப்ரல் 20]

மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மமும், அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவு நோய்அறிகுறிகளும் பரவி வருவதைத் தடுப்பதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் மேற்சொன்ன நுண்மத்தாலும் குறைவு நோய்அறிகுறிகளாலும் பாதிக்கப்பட்டவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்காகவும் வகை செய்வதற்கானதொரு சட்டம்.

மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மமும் மற்றும் அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவு நோய்அறிகுறிகளும் பரவிவருவது அனைவருக்கும், அச்சமூட்டும் கவலைதருவதாக இருப்பதால் மேற்சொன்ன நுண்மத்தையும் குறைவு நோய்அறிகுறிகளையும் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான அவசரத் தேவையொன்று இருப்பதாலும்;

மேலும் **எச்ஐவி** உறுதியான, மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மத்தாலும் அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவு நோய் அறிகுறிகளாலும் பாதிக்கப்பட்டுள்ள மற்றும் மேற்சொன்ன நோய்நுண்மமும் குறைவு நோய்அறிகுறிகளும் எளிதில் தொற்றக்கூடியவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் காப்பனைவு செய்வதற்குமான தேவையொன்று இருப்பதாலும்;

மேலும் மனித ஏமக்காப்புக் குறைவு நுண்மத்தினாலும், அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவு நோய்அறிகுறிகளாலும், பாதிக்கப்பட்டவர்கள் மீது, திறம்பட அக்கறைகொண்டு, ஆதரித்துச் சிகிச்சை அளிப்பதற்கான தேவையொன்று இருப்பதாலும்;

மேலும் மனித ஏமக்காப்புக் குறைவு நுண்மத்திற்காகவும், அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவு நோய்அறிகுறிகள் தொடர்புடைய நலவாழ்வுப் பணியில் உள்ளவர்கள் மற்றும் பிற நபர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேவையொன்று இருப்பதாலும்;

AND WHEREAS the General Assembly of the United Nations, recalling and reaffirming its previous commitments on Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome, has adopted the Declaration of Commitment on Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome (2001) to address the problems of Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome in all its aspects and to secure a global commitment to enhancing coordination and intensification of national, regional and international efforts to combat it in a comprehensive manner;

AND WHEREAS the Republic of India, being a signatory to the aforesaid Declaration, it is expedient to give effect to the said Declaration.

BE it enacted by Parliament in the Sixty-eighth Year of the Republic of India as follows:—

## CHAPTER I

## PRELIMINARY

Short title, extent and commencement.

1. (1) This Act may be called the Human Immunodeficiency Virus and Acquired Immune Deficiency Syndrome (Prevention and Control) Act, 2017.

(*2*) It extends to the whole of India.

(*3*) It shall come into force on such date[1] as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

Definitions.

**2.** In this Act, unless the context otherwise requires,—

(a) "AIDS" means Acquired Immune Deficiency Syndrome, a condition characterised by a combination of signs and symptoms, caused by Human Immunodeficiency Virus, which attacks and weakens the body's immune system making the **HIV**-positive person susceptible to life threatening conditions or other conditions, as may be specified from time to time;

---

1. 10th September, 2018 vide Notification No. S.O. 4715(E) dated 10th September 2018, see Gazette of India, Extraordinary, Part II, sec. 3(ii).

மேலும் ஐக்கிய நாடுகள் பொதுப் பேரவை, மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மம் மற்றும் அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவு நோய்அறிகுறிகள் மீது, தான் முன்பு அறிவித்த பொறுப்புடைமைகளை நினைவுபடுத்தியும், மீண்டும் உறுதியளித்தும் மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மம் மற்றும் அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவு நோய்அறிகுறிகள் ஆகிய பிரச்சினைகளை அதன் அனைத்துக் கோணங்களிலும் கையாளுவதற்கும் ஒரு விரிவான முறையில் அதனை எதிர்த்துப் போராடுவதற்கும், தேசிய, மண்டல மற்றும் பன்னாட்டிடை முயற்சிகளுக்கான ஒருங்கிணைப்பையும் தீவிரத்தன்மையையும் மேம்படுத்துவதற்கு உலகளாவிய பொறுப்புடைமையொன்றை எய்திடும் பொருட்டு மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மம் மற்றும் அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவு நோய்அறிகுறிகள் மீதான பொறுப்புடைமை விளம்புகையை **(2001)** ஏற்று கொண்டிருப்பதாலும்;

மற்றும் மேலே கண்ட விளம்புகைக்கு, இந்தியக் குடியரசு, கையொப்பமிட்டு ஒரு தரப்பினராக உள்ளதால் மேற்சொன்ன விளம்புகைக்குச் செல்திறம் கொடுப்பது உகந்ததாக இருப்பதாலும்.

இந்தியக் குடியரசின் அறுபத்தெட்டாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

## அத்தியாயம் I

## முன்னுரை

**1.** **(1)** இந்தச் சட்டம், மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மம் மற்றும் அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவு நோய்அறிகுறிச் (தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம், 2017 என்று வழங்கப்பெறும்.

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

**(2)** இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

**(3)** இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று[1] செல்லாற்றல் பெறும்.

**2.** இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,–

பொருள் வரையறைகள்.

(அ) ‘‘எய்ட்ஸ்’’(AIDS) என்பது, அடையப்பெற்ற ஏமக்காப்புக் குறைவு நோய்அறிகுறிகள், அதாவது **எச்ஐவி** உறுதியான நபரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் அவ்வப்போது குறித்துரைக்கப்படலாகும் நிலைமைகளுக்கோ அல்லது பிற நிலைமைகளுக்கோ உள்ளாகச் செய்து, உடலின் நோய்த் தடுப்பு மண்டலத்தைத் தாக்கி வலுவிழக்கச் செய்வதான, மனித ஏமக்காப்புக் குறைவு நுண்மத்தால் ஏற்படுத்தப்படும், குறிகளாலும் அறிகுறிகளாலும் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்டு வெளிப்படுத்தப்படும் ஒரு நிலைமை என்று பொருள்படும்;

---

1. 2018 , செப்டம்பர் 10 2018 , செப்டம்பர் 10 தேதியிட்ட, அறிவிக்கை எண். எஸ். ஓ. 4715 (E) ஐக் காண்க. இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II இல், பிரிவு 3(ii) ஐப் பார்க்க.

(*b*) "capacity to consent" means ability of an individual, determined on an objective basis, to understand and appreciate the nature and consequences of a proposed action and to make an informed decision concerning such action;

(c) "child affected by HIV" means a person below the age of eighteen years, who is HIV-positiveor whose parent or guardian (with whom such child normally resides) is **HIV**-positive or has lost aparent or guardian (with whom such child resided) due to AIDS or lives in a household fostering children orphaned by AIDS;

(d) "discrimination" means any act or omission which directly or indirectly, expressly or by effect, immediately or over a period of time,—

(i) imposes any burden, obligation, liability, disability or disadvantage on any person or category of persons, based on one or more **HIV**-related grounds; or

(ii) denies or withholds any benefit, opportunity or advantage from any person or category of persons, based on one or more **HIV**-related grounds,

and the expression "discriminate" to be construed accordingly.

*Explanation* 1.—For the purposes of this clause, **HIV**-related grounds include—

(i) being an **HIV**-positive person;

(ii) ordinarily living, residing or cohabiting with a person who is **HIV**-positive person;

(ஆ) ''இசைவளிக்கும் திறன்'' என்பது, கருதப்பட்ட செயல் ஒன்றின் தன்மையையும் விளைவையும் புரிந்துகொள்ளவும், மதிப்பிடவும் மற்றும் அத்தகைய செயல் தொடர்பாக தகவலில் இருந்து முடிபு ஒன்றைச் செய்வதற்கும் ஓர் நோக்கத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும், தனியொருவருக்குள்ள ஆற்றல் என்று பொருள்படும்;

(இ) ''**எச்ஐவி**யினால் பாதிக்கப்பட்ட சிறார்'' என்பது, பதினெட்டு வயதுக்குக் கீழுள்ள எந்த நபர் **எச்ஐவி** உறுதியானவராகவோ அல்லது (அத்தகைய சிறாருடன் வழக்கமாக சேர்ந்து குடியிருந்து வருகிற) **எச்ஐவி** உறுதியான அவருடைய பெற்றோராகவோ அல்லது காப்பாளராகவோ இருக்கிறாரோ அல்லது (அத்தகைய சிறாருடன் சேர்ந்து குடியிருந்து) ஒரு பெற்றோரை அல்லது காப்பாளரை **எய்ட்ஸ்** காரணமாக இழந்திருக்கிறாரோ அல்லது **எய்ட்ஸ்** நோயினால் அனாதையான சிறார்களுக்கு ஆதரவளித்துப் பேணிவருகிற குடும்பம் ஒன்றில் வாழ்ந்து வருகிறாரோ அந்த நபர் ஒருவர் என்று பொருள்படும்;

(ஈ) ''வேற்றுமைகாட்டுதல்'' என்பது, எந்தச் செயல் அல்லது செய்யாதுவிடுகை அது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ அல்லது விளைபயனாகவோ, உடனடியாகவோ அல்லது ஒரு காலஅளவின் போதோ,–

(i) **எச்ஐவி** தொடர்புடைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்களின் அடிப்படையில், எந்தவொரு நபர் அல்லது நபர்களின் வகையினர் மீதும் எந்தவொரு சுமையையும், கடமைப்பாட்டையும், கடப்பாட்டையும், தகவுக்கேட்டையும் அல்லது பாதகத்தையும் விதிக்கிற; அல்லது

(ii) **எச்ஐவி** தொடர்புடைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்களின் அடிப்படையில், எந்தவொரு நபருக்கும் அல்லது நபர்களுக்கும் நலப்பயன், வாய்ப்பு நலன் அல்லது சாதகம் எதனையும் இல்லையென மறுக்கிற அல்லது கொடுக்காமல் நிறுத்தி வைக்கிற

அந்தச் செயல் அல்லது செய்யாது விடுகை என்று பொருள்படும்; மற்றும் ''வேற்றுமைகாட்டு'' என்ற சொல் அதன்படியே பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

**விளக்கம் 1.–** இந்தக் கூறின் நோக்கங்களுக்காக, **எச்ஐவி**க்குத் தொடர்புடைய காரணங்கள் என்பவை–

(i) **எச்ஐவி** உறுதியான ஒரு நபராக இருத்தல்;

(ii) **எச்ஐவி** உறுதியான நபராக இருக்கும் ஒரு நபருடன் வழக்கமாக வாழ்தல், குடியிருத்தல் அல்லது

(iii) ordinarily lived, resided or cohabited with a person who was **HIV**-positive.

**Explanation 2**.—For the removal of doubts, it is hereby clarified that adoption of medically advised safeguards and precautions to minimise the risk of infection shall not amount to discrimination;

(e) "domestic relationship" means a relationship as defined under clause (*f*) of section 2 of the Protection of Women from Domestic Violence Act, 2005; 43 /2005.

(f) "establishment" means a body corporate or co-operative society or any organisation or institution or two or more persons jointly carrying out a systematic activity for a period of twelve months or more at one or more places for consideration or otherwise, for the production, supply or distribution of goods or services;

(g) "guidelines" means any statement or any other document issued by the Central Government indicating policy or procedure or course of action relating to HIV and AIDS to be followed by the Central Government, State Governments, governmental and non-governmental organisations and establishments and individuals dealing with prevention, control and treatment of HIV or AIDS;

(h) "healthcare provider" means any individual whose vocation or profession is directly or indirectly related to the maintenance of the health of another individual and includes any physician, nurse, paramedic, psychologist, counsellor or other individual providing medical, nursing, psychological or other healthcare services including HIV prevention and treatment services;

(i) "HIV" means Human Immunodeficiency Virus;

(iii) **எச்ஜவி** உறுதியானவராக இருந்த ஒரு நபருடன் வழக்கமாக வாழ்ந்தமை, குடியிருந்தமை அல்லது உடனுறைந்தமை ஆகியவற்றை உள்ளடக்கும்.

**விளக்கம் 2.–** நோய்த்தொற்று ஏற்படும் ஆபத்தைக் குறைக்கும் பொருட்டு மருத்துவ ஆலோசனைக் காப்பணைவுகளையும் முன்னெச்சரிக்கைகளையும் மேற்கொள்வது, வேற்றுமைகாட்டுவதற்குச் சமமாகாது என்ற ஐயப்பாடுகளை அகற்றுவதற்காக ஈங்கிதனால் தெளிவுப்படுத்தப்படுகிறது.

43/2005. (உ) ''குடும்ப உறவு'' என்பது, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல் சட்டம், 2005 இன் 2 ஆம் பிரிவின் (ஊ) கூறின்படி பொருள்வரையறை செய்யப்பட்டவாறான ஓர் உறவு என்று பொருள்படும்;

(ஊ) '' நிறுவனம்'' என்பது சரக்குகள் அல்லது சேவைகளின் உற்பத்தி, வழங்கீடு அல்லது பகிர்ந்தளித்தலுக்காக, மறுபயனுக்காகவோ பிறவாறாகவோ ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் பன்னிரெண்டு மாதக் காலஅளவு ஒன்றுக்கு முறைப்படியான செயல்பாடு ஒன்றை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூட்டாக நடத்திவரும் ஒரு கூட்டுருமக் குழுமம் அல்லது ஒரு கூட்டுறவுச் சங்கம் அல்லது அமைப்பு அல்லது நிலையம் எதுவும் என்று பொருள்படும்;

(எ) ''வழிகாட்டுநெறிகள்'' என்பன, மைய அரசாலும், மாநில அரசுகளாலும் மற்றும் **எச்ஜவி** அல்லது எய்ட்ஸ் தடுப்பு, கட்டுப்படுத்துதல் மற்றும் சிகிச்சையளித்தலைக் கையாளும் அரசுசார் மற்றும் அரசுசாரா அமைப்புகளாலும், நிறுவனங்களாலும், தனிநபர்களாலும் பின்பற்றப்பட வேண்டிய **எச்ஜவி** மற்றும் எய்ட்ஸ் தொடர்பான கொள்கை அல்லது நெறிமுறை அல்லது நடவடிக்கையின் போக்கைச் சுட்டிக்காட்டி மைய அரசால் வெளியிடப்படும் அறிக்கை எதுவும் அல்லது பிற ஆவணம் எதுவும் என்று பொருள்படும்;

(ஏ) ''உடல்நலக் காப்புப் பணியாளர்'' என்பவர், எந்த ஒரு தனிநபருடைய உறுதொழில் அல்லது விழைதொழில் நேரடியாகவோ மறைமுகமாகவோ இன்னொரு தனிநபருடைய உடல்நலனை பேணிவருவது தொடர்புடையதாக இருக்கிறதோ அந்தத் தனிநபர் எவரும் என்று பொருள்படும்; மற்றும் பொது மருத்துவர், செவிலியர், துணை மருத்துவப் பணியாளர், உளவியல் அறிஞர், தொழில்முறை ஆலோசகர் அல்லது **எச்ஜவி** தடுப்பு மற்றும் சிகிச்சைப் பணிகள் உள்ளடங்கலான மருத்துவம், செவிலியர் பணி, உளவியல் சார்ந்த அல்லது பிற உடல்நலக்காப்புப் பணிகளை வழங்கும் எவரையும் உள்ளடக்கும்;

(ஐ) '' **எச்ஜவி**'' என்பது, மனித ஏமக்காப்புக் குறைபாட்டு நுண்மம் என்று பொருள்படும்;

(j) "HIV-affected person" means an individual who is HIV-positive or whose partner (with whom such individual normally resides) is HIV-positive or has lost a partner (with whom such individual resided) due to AIDS;

(k) "HIV-positive person" means a person whose HIV test has been confirmed positive;

(l) "HIV-related information" means any information relating to the HIV status of a person and includes—

(i) information relating to the undertaking performing the HIV test or result of an HIV test;

(ii) information relating to the care, support or treatment of that person;

(iii) information which may identify that person; and

(iv) any other information concerning that person, which is collected, received, accessed or recorded in connection with an **HIV** test, **HIV** treatment or **HIV**-related research or the **HIV** status of that person;

(m) "**HIV** test" means a test to determine the presence of an antibody or antigen of **HIV;**

(n) "informed consent" means consent given by any individual or his representative specific to a proposed intervention without any coercion, undue influence, fraud, mistake or misrepresentation and such consent obtained after informing such individual or his representative, as the case may be, such information, as specified in the guidelines, relating to risks and benefits of, and alternatives to, the proposed intervention in such language and in such manner as understood by that individual or his representative, as the case may be;

(ஒ) ''**எச்ஐவி** பாதிப்புக்குள்ளான நபர்'' என்பது, **எச்ஐவி** உறுதி செய்யப்பட்டிருக்கிற தனிநபர் அல்லது அவருடைய கூட்டாளி (அத்தகைய தனிநபர் வழக்கமாக எந்த கூட்டாளியுடன் குடியிருந்து வருகிறாரோ) **எச்ஐவி** உறுதியானவராக இருக்கிறாரோ அல்லது (எந்தக் கூட்டாளியுடன் அத்தகைய தனிநபர் குடியிருந்து வந்தாரோ) அந்தக் கூட்டாளி ஒருவரை எய்ட்ஸ் காரணமாக இழந்திருக்கிறாரோ அந்தத் தனிநபர் என்று பொருள்படும்;

(ஓ)'' **எச்ஐவி** உறுதியான நபர்'' என்பது, எந்த ஒரு நபருடைய **எச்ஐவி** பரிசோதனை, உள்ளமையை உறுதிசெய்யப்பட்டிருக்கிறதோ அந்த நபர் ஒருவர் என்று பொருள்படும்;

(ஔ) ''**எச்ஐவி** தொடர்புடைய தகவல்'' என்பது, ஒரு நபருடைய **எச்ஐவி** தொற்றுநிலை தொடர்பான தகவல் எதுவும் என்று பொருள்படும்; மற்றும் –

(i) **எச்ஐவி** பரிசோதனை புரிவதை மேற்கொள்வது தொடர்பான அல்லது **எச்ஐவி** பரிசோதனை ஒன்றுக்கான முடிவு தொடர்பான தகவல் ;

(ii) அந்த நபருக்குரிய காப்பு, ஆதரவு அல்லது சிகிச்சை தொடர்பான தகவல் ;

(iii) அந்த நபரை அடையாளங்காட்டும் தகவல்; மற்றும்

(iv) அந்த நபருக்கான **எச்ஐவி** பரிசோதனை, **எச்ஐவி** சிகிச்சை அல்லது **எச்ஐவி** தொடர்புடைய ஆராய்ச்சி அல்லது **எச்ஐவி** தொற்றுநிலை தொடர்பாக திரட்டப்படும், பெறப்படும், கைக்கொள்ளப்படும் அல்லது பதிவு செய்யப்படும் அந்த நபர் சார்ந்த பிற தகவல் எதுவும் ஆகியவற்றை உள்ளடக்கும்;

(க) ''**எச்ஐவி** பரிசோதனை'' என்பது, **எச்ஐவி** நோய் எதிர்ப்பான் அல்லது நோய் எதிர்ப்பை ஊக்குவிக்கும் மூலம் ஒன்று உள்ளமையைத் தீர்மானிக்கும் ஒரு பரிசோதனை என்று பொருள்படும்;

(ங) ''வெளிப்படுத்தப்பட்ட இசைவு'' என்பது, ஓர் கருதப்பட்ட சிகிச்சை முறையின் ஆபத்துநிலை மற்றும் நலன்கள் மற்றும் அதற்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பாக வழிகாட்டுநெறிகளில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தகவலை, நேர்வுக்கேற்ப, தனிநபரோ அல்லது அவருடைய சார்பாற்றுநரோ புரிந்துகொள்ளும் அத்தகைய மொழியிலும், அத்தகைய முறையிலும், நேர்வுக்கேற்ப, அத்தகைய தனி நபரிடம் அல்லது அவருடைய சார்பாற்றுநரிடம் தெரிவித்த பின்பு பெறப்படும் அத்தகைய இசைவு வலுக்கட்டாயம், தகாத செல்வாக்கு, மோசடி, தவறுகை அல்லது திரித்துக் கூறுதல் எதுவுமின்றி உத்தேசிக்கப்பட்ட சிசிச்சை முறைக்குக் குறிப்பாக தனிநபர் எவராலும் அல்லது அவருடைய சார்பாற்றுநரால் கொடுக்கப்படும் இசைவு என்று பொருள்படும்;

(o) "notification" means a notification published in the Official Gazette;

(p) "partner" means a spouse, *de facto* spouse or a person with whom another person has relationship in the nature of marriage;

(q) "person" includes an individual, a Hindu Undivided Family, a company, a firm, an association of persons or a body of individuals, whether incorporated or not, in India or outside India, any corporation established by or under any Central or State Act or any company including a Government company incorporated under the Companies Act, 1956, any Limited Liability Partnership under the Limited Liability Partnership Act, 2008, any body corporate incorporated by or under the laws of a country outside India, a co-operative society registered under any law relating to co-operative societies, a local authority, and every other artificial juridical person; 1/1956. 6/2009.

(r) "prescribed" means prescribed by rules made by the Central Government or the State Government, as the case may be;

(s) "protected person" means a person who is—

(i) HIV-Positive; or

(ii) ordinarily living, residing or cohabiting with a person who is HIV-positive person; or

(iii) ordinarily lived, resided or cohabited with a person who was HIV-positive;

(t) "reasonable accommodation" means minor adjustments to a job or work that enables an HIV-positive person who is otherwise qualified to enjoy equal benefits or to perform the essential functions of the job or work, as the case may be;

(u) "relative", with reference to the protected person, means—

(ச) ''அறிவிக்கை'' என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஓர் அறிவிக்கை என்று பொருள்படும்;

(ஞ) ''கூட்டாளி'' என்பது, ஒரு வாழ்க்கைத்துணை சட்டப்படி உண்மையான வாழ்க்கைத் துணை அல்லது திருமணத்தின் தன்மையில் ஒரு நபர் இன்னொருவர் எவருடன் உறவுமுறை கொண்டிருக்கிறாரோ அந்த நபர் ஒருவர் என்று பொருள்படும்;

(ட) ''நபர்'' என்பது, ஒரு தனிநபர், ஓர் இந்துக் கூட்டுக் குடும்பம், இந்தியாவிலோ அல்லது இந்தியாவிற்கு வெளியேயோ கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பினும் இல்லாவிடினும் ஒரு நிறுமம், ஒரு நிறுவகம், நபர்களின் ஒரு கழகம் அல்லது ஒரு தனிநபர்களின் குழுமம், மைய அல்லது மாநிலச் சட்டம் எதனாலுமோ அதன் வழியாலோ நிறுவப்பட்ட கூட்டுருமம் எதனையும் அல்லது
1/1956. நிறுமங்கள் சட்டம், 1956 இன்படி கூட்டுருமமாகப் பதிவு பெற்ற ஓர் அரசு நிறுமம் உள்ளடங்கலான நிறுமம் எதனையும்,
6/2009. வரையறுக்கப்பட்ட கடப்பாட்டுக் கூட்டாண்மைச் சட்டம், 2008 இன் படியான வரையறுக்கப்பட்ட கடப்பாட்டுக் கூட்டாண்மை எதனையும், இந்தியாவுக்கு வெளியேயுள்ள ஒரு நாட்டின் சட்டத்தாலோ அதன் வழியாலோ கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்ட கூட்டுருமக் குழுமம் எதனையும், கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான சட்டம் எதன்படியும் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவு சங்கம், ஒரு உள்ளாட்சி அதிகாரஅமைப்பு, மற்றும் ஒவ்வொரு பிற புனைவு சட்ட நபர் ஒவ்வொருவரையும் உள்ளடக்கும்;

(ண) '' வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, நேர்வுக்கேற்ப, மைய அரசாலோ அல்லது மாநில அரசாலோ செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(த) ''பாதுகாக்கப்பட்ட நபர்'' என்பது, எந்த ஒரு நபர்—

(i) **எச்ஐவி** உறுதியானவராக இருக்கிறாரோ; அல்லது

(ii) **எச்ஐவி** உறுதியான நபராக இருக்கிற ஒரு நபருடன் வழக்கமாக வாழ்ந்து வருகிறாரோ, குடியிருந்து வருகிறாரோ அல்லது உடனுறைந்து வருகிறாரோ; அல்லது

(iii) **எச்ஐவி** உறுதியான நபராக இருக்கிற ஒரு நபருடன் வழக்கமாக வாழ்ந்து வந்தாரோ, குடியிருந்து வந்தாரோ அல்லது உடனுறைந்து வந்தாரோ அந்த நபர் ஒருவர் என்று பொருள்படும்;

(ந) ''தகுமளவில் இணக்கப்படுத்துதல்'' என்பது, நேர்வுக்கேற்ப, சில்லறை வேலை அல்லது வேலைக்கு சமமான பயன்களைத் துய்ப்பதற்கு அல்லது அவற்றின் இன்றியமையாப் பணிகளைப் புரிவதற்குப் பிறவாறாகத் தகுதிப்பாடுள்ளவரான **எச்ஐவி** உறுதியான நபர் ஒருவரை ஒரு சில்லறை வேலை அல்லது வேலைக்கு இயல்விப்பதான சிறிய தகவமைவுகள் என்று பொருள்படும்;

(ப) ''உறவினர்'' என்பது, பாதுகாக்கப்பட்ட நபர் குறித்து—

(*i*) spouse of the protected person;

(*ii*) parents of the protected person;

(*iii*) brother or sister of the protected person;

(*iv*) brother or sister of the spouse of the protected person;

(*v*) brother or sister of either of the parents of the protected person;

(vi) in the absence of any of the relatives mentioned at sub-clauses (i) to (v), any lineal ascendant or descendant of the protected person;

(*vii*) in the absence of any of the relatives mentioned at sub-clauses (*i*) to (*vi*), any lineal ascendant or descendant of the spouse of the protected person;

(*v*) "significant-risk" means—

(*a*) the presence of significant-risk body substances;

(b) a circumstance which constitutes significant-risk for transmitting or contracting HIV infection; or

(c) the presence of an infectious source and an uninfected person.

***Explanation*.**—For the purpose of this clause,—

(*i*) "significant-risk body substances" are blood, blood products, semen, vaginal secretions, breast milk, tissue and the body fluids, namely, cerebrospinal, amniotic, peritoneal, synovial, pericardial and pleural;

(*ii*) ''circumstances which constitute significant-risk for transmitting or contracting HIV infection" are—

(i) பாதுகாக்கப்படும் நபருடைய வாழ்க்கைத் துணை;

(ii) பாதுகாக்கப்படும் நபருடைய பெற்றோர்;

(iii) பாதுகாக்கப்படும் நபருடைய சகோதரர் அல்லது சகோதரி;

(iv) பாதுகாக்கப்படும் நபருடைய வாழ்க்கைத் துணையின் சகோதரர் அல்லது சகோதரி;

(V) பாதுகாக்கப்படும் நபருடைய பெற்றோரில் எவரொருவரின் சகோதரர் அல்லது சகோதரி;

(vi). (i) முதல் (v) வரையிலான உட்கூறுகளில் குறிப்பிடப்பட்ட உறவினர்களில் எவரும் இல்லாதபோது, நேர்வழி முன்னோர் அல்லது வழித்தோன்றல் எவரும்;

(vii). (i) முதல் (vi) வரையிலான உட்கூறுகளில் குறிப்பிடப்பட்ட உறவினர்களில் எவரும் இல்லாதபோது, பாதுகாக்கப்படும் நபருடைய வாழ்க்கைத் துணையின் நேர்வழி முன்னோர் அல்லது வழித்தோன்றல் எவரும்

என்று பொருள்படும்;

(ம) ‘‘குறிப்பிடத்தக்க ஆபத்துநிலை’’ என்பது–

(அ) குறிப்பிடத்தக்க ஆபத்தான உடற்பொருள்கள் உளதாயிருத்தல்;

(ஆ) **எச்ஐவி** நோய்த்தொற்று பரவுவதற்கான அல்லது தொற்று ஏற்படுவதற்கான குறிப்பிடத்தக்க ஆபத்தை உருவாக்குவதற்கான ஒரு சூழ்நிலை; அல்லது

(இ) நோய்த் தொற்றைப் பரப்புகிற ஒரு மூலவூற்றும் நோய்தொற்றில்லாத ஒரு நபரும் இருக்கும் நிலை, என்று பொருள்படும்.

**விளக்கம்.–** இந்தக் கூறின் நோக்கத்திற்கு,–

(i) ‘‘குறிப்பிடத்தக்க ஆபத்தான உடற்பொருள்கள்’’ என்பன, குருதி, குருதி ஆக்கப்பொருள்கள், விந்து, யோனிக்குழாய் சுரப்புகள், முலைப்பால், திசு மற்றும் பெருமூளைத் தண்டுவடநீர், கருவிலிருக்கும் குழந்தையைச் சுற்றிக் காணப்படும் திரவம், வயிற்றறை உறையழற்சித் திரவம், உயவு நீர்மம், இதய உறைநீர் மற்றும் நுரையீரல் உறைநீர் ஆகிய உடல் நீர்மங்கள்;

(ii) ‘‘**எச்ஐவி** நோய்த்தொற்று பரவுவதற்கோ அல்லது தொற்று ஏற்படுவதற்கோ குறிப்பிடத்தக்க ஆபத்தை உருவாக்குவதற்கான சூழ்நிலைகள்’’ என்பன–

(*A*) sexual intercourse including vaginal, anal or oral sexual intercourse which exposes an uninfected person to blood, blood products, semen or vaginal secretions of an HIV-positive person;

(*B*) sharing of needles and other paraphernalia used for preparing and injecting drugs between HIV-positive persons and uninfected persons;

(*C*) the gestation, giving birth or breast feeding of an infant when the mother is an HIV-positive person;

(*D*) transfusion of blood, blood products, and transplantation of organs or other tissues from an HIV-positive person to an uninfected person, provided such blood, blood products, organs or other tissues have not been tested conclusively for the antibody or antigen of HIV and have not been rendered non-infective by heat or chemical treatment; and

(*E*) other circumstances during which a significant-risk body substance, other than breast milk, of an HIV-positive person contacts or may contact mucous membranes including eyes, nose or mouth, non-intact skin including open wounds, skin with a dermatitis condition or abraded areas or the vascular system of an uninfected person, and including such circumstances not limited to needle-stick or puncture wound injuries and direct saturation or permeation of these body surfaces by the significant-risk body substances:

(அ) நோய்த்தொற்றில்லாத ஒரு நபரை, **எச்ஐவி** உறுதியான ஒரு நபரின் குருதி, குருதிஆக்கப்பொருள்கள், விந்து அல்லது யோனிக்குழாய் சுரப்புகளினால் வரும் இடருக்கு உள்ளாக்கும் யோனிக்குழாய், ஆசனவாய் அல்லது வாயால் பாலியல் பாலுறவு உள்ளடங்கலான பாலியல் பாலுறவு;

(ஆ) **எச்ஐவி** உறுதியான நபர்களுக்கும் நோய்த்தொற்றில்லாத நபர்களுக்கும் இடையே மருந்துப் பொருள்கள் தயாரிப்பதற்காகவும் ஊசிபோடுவதற்காகவும் பயன்படுத்தப்படும் ஊசிகளையும் பிற துணைக் கருவித் தொகுதியையும் பகிர்ந்துகொள்ளுதல்;

(இ) தாய் ஒரு **எச்ஐவி** உறுதியான நபராக இருக்கும்போது ஒரு குழந்தையின் கருவளர்ச்சி நிலையில் இருத்தல் குழந்தையை ஈன்றெடுத்தல் அல்லது அதற்குத் தாய்ப்பால் கொடுத்தல்;

(ஈ) **எச்ஐவி** உறுதியான ஒரு நபரிடமிருந்து நோய்த்தொற்றில்லாத ஒரு நபருக்கு புதுக் குருதியோ, குருதிஆக்கப் பொருள்களோ செலுத்துதல் மற்றும் உறுப்புகளை அல்லது பிற திசுக்களை மாற்றிப் பொருத்துதல், ஆனால் அத்தகைய குருதியோ, குருதி ஆக்கப்பொருள்களோ, உறுப்புகளோ அல்லது பிற திசுக்களோ **எச்ஐவி** நோய் எதிர்ப்பான் அல்லது நோய் எதிர்ப்பை ஊக்குவிக்கும் மூலம் அறுதியாகப் பரிசோதனை செய்யப்படாமலும் மற்றும் சூடேற்றுவதன் மூலமாகவோ வேதிமுறைக்காப்புச் செயல்பாட்டின் மூலமாகவோ நோய்த்தொற்றில்லாத நிலை இல்லாமல் இருத்தல்; மற்றும்

(உ) **எச்ஐவி** உறுதியான ஒரு நபரின் முலைப்பால் அல்லாத பிற, குறிப்பிடத்தக்க ஆபத்தான உடற்பொருள் நோய்த்தொற்றில்லாத ஒரு நபரின் கண்கள், மூக்கு அல்லது வாய், தோல்நீங்கிய காயங்கள், அழற்சி நிலையுடனான தோல் அல்லது உராய்வுற்ற காயப்பகுதிகள் அல்லது நாளவட்ட மண்டலம் உள்ளடங்கலான சேதமுற்றத் தோல் உள்ளடங்கலான சளிச் சவ்வு தொடர்பு அல்லது தொடர்புறலாகும், ஊசிக் கம்பி அல்லது துளையிட்ட காயங்களுக்கு மட்டுமே வரம்பிடப்படாத மற்றும் குறிப்பிடத்தக்க ஆபத்தான உடற்பொருட்களால் இந்த உடற்பரப்புகளின் நேரடித் ததும்புநிலை அல்லது ஊடுருவலின் அத்தகைய சூழ்நிலைகள் உள்ளடங்கலான பிற சூழ்நிலைகள்:

Provided that "significant-risk" shall not include

(*i*) exposure to urine, faeces, sputum, nasal secretions, saliva, sweat, tears or vomit that does not contain blood that is visible to the naked eye;

(*ii*) human bites where there is no direct blood to blood, or no blood to mucous membrane contact;

(*iii*) exposure of intact skin to blood or any other blood substance; and

(*iv*) occupational centres where individuals use scientifically accepted Universal Precautions, prohibitive techniques and preventive practices in circumstances which would otherwise pose a significant-risk and such techniques are not breached and remain
intact;

(*w*) "State AIDS Control Society" means the nodal agency of the State Government responsible for implementing programmes in the field of HIV and AIDS;

(*x*) "State Government", in relation to a Union territory, means the Administrator of that Union territory appointed by the President under article 239 of the Constitution; and

(*y*) "Universal Precautions" means control measures that prevent exposure to or reduce, the risk of transmission of pathogenic agents (including HIV) and includes education, training, personal protective equipment such as gloves, gowns and masks, hand washing, and employing safe work practices.

**வரம்புரையாக:** ''குறிப்பிடத்தக்க ஆபத்து'' என்பது –

(i) இயல்பான பார்வைத் திறனால் காணக்கூடியதான குருதியைக் கொண்டதாக இல்லாத சிறுநீர், மலம், தொண்டைச் சளி, மூக்குவழி சுரப்புகள், எச்சில், வியர்வை, கண்ணீர் அல்லது வாந்தி இவற்றிற்குத் திறந்த நிலை;

(ii) குருதியோடு குருதிக்கும் அல்லது குருதியோடு சளிச்சவ்வுக்கும் நேரடித் தொடர்பு எதுவும் இல்லாதவிடத்து மனிதக்கடிக் காயங்கள் ;

(iii) சேதமுறாத தோலோடு வரும் குருதிக்கு அல்லது பிற குருதி ஆக்கப்பொருளுக்குத் திறந்த நிலை; மற்றும்

(iv) ஒரு குறிப்பிடத்தக்க ஆபத்தைப் பிறவாறாக பரப்பக்கூடியவையான சூழ்நிலைகளில் தனிநபர்கள் அறிவியல் நுட்பமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகளாவிய முன்னெச்சரிக்கைகள், தடைசெய்யப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் தடுப்பு நடைமுறைகள் மற்றும் அத்தகைய தொழில்நுட்பங்கள் மீறுகை செய்யப்படாமலும் முழுமையாகவும் பயன்படுத்திக்கொள்கிறவிடத்து தொழில்சார் மையங்கள்

ஆகியவற்றை உள்ளடக்காது ;

(ய) ''மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம்'' என்பது, **எச்ஐவி** மற்றும் எய்ட்ஸ் களத்தில் செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்புடைய மாநில அரசின் வழிகாட்டும் முகமை என்று பொருள்படும்;

(ர) ''மாநில அரசு'' என்பது, ஓர் ஒன்றியத்து ஆட்சிநிலவரையைப் பொறுத்தவரை, அரசமைப்பின் 239 ஆம் உறுப்பின்படி குடியரசுத் தலைவரால் அமர்த்தப்பெற்ற அந்த ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் ஆளுகையர் என்று பொருள்படும்; மற்றும்

(ல) ''உலகளாவிய முன்னெச்சரிக்கைகள்'' என்பது, (எச்ஐவி உள்ளடங்கலான) நோய்த் தோற்றுவிக்கிற முகமைகளைப் பரப்பும் ஆபத்துக்குத் திறந்த நிலையைத் தடுக்கும் அல்லது குறைக்கும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் என்று பொருள்படும்; மற்றும் கையுறைகள், தளர் உடைகள் மற்றும் முகக்கவசங்கள், கைத்துடைப்பான் போன்ற கல்வி கற்பித்தல், பயிற்சியளித்தல் முதலியவற்றில் ஈடுபடும் தனியொருவர் தற்பாதுகாப்புச் சாதனம், மற்றும் பாதுகாப்பாகப் பணியாற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

## CHAPTER II
## PROHIBITION OF CERTAIN ACTS

Prohibition of discrimination.

3. No person shall discriminate against the protected person on any ground including any of the following, namely:—

(*a*) the denial of, or termination from, employment or occupation, unless, in the case of termination, the person, who is otherwise qualified, is furnished with—

(i) a copy of the written assessment of a qualified and independent healthcare provider competent to do so that such protected person poses a significant risk of transmission of HIV to other person in the workplace, or is unfit to perform the duties of the job; and

(ii) a copy of a written statement by the employer stating the nature and extent of administrative or financial hardship for not providing him reasonable accommodation;

(b) the unfair treatment in, or in relation to, employment or occupation;

(c) the denial or discontinuation of, or, unfair treatment in, healthcare services;

(d) the denial or discontinuation of, or unfair treatment in, educational, establishments and services thereof;

(e) the denial or discontinuation of, or unfair treatment with regard to, access to, or provision or enjoyment or use of any goods, accommodation, service, facility, benefit, privilege or opportunity dedicated to the use of the general public or customarily available to the public, whether or not for a fee, including shops, public restaurants, hotels and places of public entertainment or the use of wells, tanks, bathing ghats, roads, burial grounds or funeral ceremonies and places of public resort;

## அத்தியாயம் II

## குறித்தசில செயல்களுக்குத் தடை

**3.** எவர் ஒருவரும், பாதுகாக்கப்பட்டுள்ள நபருக்கு எதிராக பின்வருவனவற்றில் எதுவும் உள்ளடங்கலான எந்தவொரு காரணத்திற்காகவும் வேற்றுமை காட்டுதல் ஆகாது, அவையாவன:- வேற்றுமை காட்டுதலுக்குத் தடை.

(அ) நீக்கப்படும் நேர்வில், பிறவாறாகத் தகுதிப்பாடுடையவராக இருக்கிற நபர் –

(i) அத்தகைய பாதுகாக்கப்பட்டுள்ள நபர், பணியிடத்தில் பிறருக்கு **எச்ஐவி**யைப் பரப்புவதற்கானக் குறிப்பிடத்தக்க ஆபத்துள்ளவர் என்றோ, அல்லது அவர் பணிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தகுதியற்றவர் என்றோ மதிப்பிடுவதற்குத் தகுதிறமுள்ள ஒரு தகுதிப்பாடும் தற்சார்பும் உடைய உடல்நலக் காப்பாளர் ஒருவரின் எழுத்து வடிவிலான மதிப்பீட்டின் படியொன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி; மற்றும்

(ii) அவருக்குத் தகுமான நிருவாக மற்றும் நிதியியல் இன்னலின் தன்மையையும் அளவையும் குறிப்பிட்டு வேலைதருநரால் வழங்கப்பட்ட ஓர் எழுத்து வடிவிலான விவரவுரையின் படியொன்று அளிக்கப்பட்டிருந்தாலும் அன்றி வேலையமர்த்தம் அல்லது தொழில் மறுக்கப்படுதல், அதிலிருந்து நீக்கப்படுதல்;

(ஆ) வேலையமர்த்தம் அல்லது தொழிலில் அல்லது அதன் தொடர்பானவற்றில், தகாத முறையில் நடத்துதல்;

(இ) உடல்நலக் காப்பு பணிகள் மறுக்கப்படுதல் அல்லது நிறுத்தப்படுதல் அல்லது அவற்றில் தகாத முறையில் நடத்துதல்;

(ஈ) கல்வி நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணிகள் மறுக்கப்படுதல் அல்லது நிறுத்தப்படுதல் அல்லது அவற்றில் தகாத முறையில் நடத்துதல்;

(உ) கடைகள், பொது உண்டிச் சாலைகள், உணவகங்கள் மற்றும் பொதுக் கேளிக்கை இடங்கள் உள்ளடங்கலான, கட்டணம் ஒன்று செலுத்தியோ இல்லாமலோ பொது மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்ட அல்லது வழக்கமுறையில் பொது மக்களுக்குக் கிடைக்கக்கூடியதான சரக்குகள், இடவசதி, பணி, வசதிகள், நலப் பயன், சிறப்புரிமை அல்லது வாய்ப்பு எதற்கும் வகை செய்தல்; அல்லது நுகர்தல் அல்லது பயன்படுத்துதல் அல்லது கிணறுகள், குளங்கள், நீராடுதுறைகள், சாலைகள், இடுகாடுகள் அல்லது ஈமச்சடங்குகள் மற்றும் பொதுமக்கள் சாருமிடம் ஆகியவற்றைப் பயன்படுத்துதல் பொறுத்து அல்லது அவற்றிற்குச் சென்றுவரும் வாய்ப்பு மறுக்கப்படுதல் அல்லது நிறுத்தப்படுதல் அல்லது அதுபொறுத்துத் தகாத முறையில் நடத்துதல்;

(*f*) the denial, or, discontinuation of, or unfair treatment with regard to, the right of movement;

(*g*) the denial or discontinuation of, or, unfair treatment with regard to, the right to reside, purchase, rent, or otherwise occupy, any property;

(*h*) the denial or discontinuation of, or, unfair treatment in, the opportunity to stand for, or, hold public or private office;

(*i*) the denial of access to, removal from, or unfair treatment in, Government or private establishment in whose care or custody a person may be;

(*j*) the denial of, or unfair treatment in, the provision of insurance unless supported by actuarial studies;

(*k*) the isolation or segregation of a protected person;

(*l*) HIV testing as a pre-requisite for obtaining employment, or accessing healthcare services or education or, for the continuation of the same or, for accessing or using any other service or facility:

Provided that, in case of failure to furnish the written assessment under sub-clause (*i*) of clause (*a*), it shall be presumed that there is no significant-risk and that the person is fit to perform the duties of the job, as the case may be, and in case of the failure to furnish the written statement under sub-clause (*ii*) of that clause, it shall be presumed that there is no such undue administrative or financial hardship

(ஊ) தடையின்றி எங்கும் சென்றுவருவதற்கான உரிமை மறுக்கப்படுதல் அல்லது நிறுத்தப்படுதல், அல்லது அது பொறுத்துத் தகாத முறையில் நடத்துதல்;

(எ) சொத்து எதிலும் குடியிருப்பதற்கான, அதனை விலைக்கு வாங்குவதற்கான, வாடகைக்கு எடுப்பதற்கான அல்லது பிறவாறாகக் கையுடைமையில் வைத்திருப்பதற்கான உரிமை மறுக்கப்படுதல் அல்லது நிறுத்தப்படுதல் அல்லது அது பொறுத்துத் தகாத முறையில் நடத்துதல்;

(ஏ) பொது அல்லது தனியார் பதவிக்கு போட்டியிடுவதற்கு அல்லது அதில் பதவி வகிப்பதற்கு வாய்ப்பு மறுக்கப்படுதல் அல்லது நிறுத்தப்படுதல் அல்லது அதில் தகாத முறையில் நடத்துதல்;

(ஐ) நபர் ஒருவர், எந்த அரசு அல்லது தனியார் நிறுவனத்தின் கவனிப்பில் அல்லது பாதுகாப்பில் இருக்கக்கூடுமோ அந்த அரசு அல்லது தனியார் நிறுவனத்திற்குச் சென்றுவரும் வாய்ப்பு மறுக்கப்படுதல், நீக்கப்படுதல் அல்லது அதில் தகாத முறையில் நடத்தப்படுதல்;

(ஒ) காப்பீட்டுக் கணிப்பாய்வின் ஆதாரத்துடனன்றி காப்பீட்டு வகை செய்ய மறுத்தல், அல்லது அதில் தகாத முறையில் நடத்துதல் ;

(ஓ) பாதுகாக்கப்பட்டுள்ள நபரைத் தனிமைப்படுத்துதல் அல்லது பிரித்து வைத்தல்;

(ஔ) வேலைவாய்ப்புப் பெறுவதற்காக அல்லது உடல்நலக் காப்புச் சேவைகள் அல்லது கல்விக்கான வாய்ப்பிற்காக அல்லது அதனைத் தொடர்வதற்காக அல்லது பிற சேவை அல்லது வசதி எதற்குமான வாய்ப்பு அல்லது அதனைப் பயன்படுத்துவதற்காக **எச்ஐவி** பரிசோதனை ஒரு முன்தேவையாதல்:

**வரம்புரையாக:** (அ) கூறின் (i) ஆம் உட்கூறின்படி எழுத்துவடிவிலான விவரவுரையை அளிக்கத் தவறும் நேர்வில், நேர்வுக்கேற்ப, குறிப்பிடத்தக்க ஆபத்து ஏதும் இல்லை என்றும் அந்த நபர் பணிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தகுதியுள்ளவர் என்றும் துணிபு கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அந்தக் கூறின் (ii) ஆம் உட்கூறின்படி எழுத்து வடிவிலான விவரவுரையை அளிக்கத் தவறும் நேர்வில், அத்தகைய தகாத நிருவாக அல்லது நிதியியல் இன்னல் ஏதும் இல்லை என்றும் துணிபு கொள்ளப்படுதல் வேண்டும்.

Prohibition of certain acts.

4. No person shall, by words, either spoken or written, publish, propagate, advocate or communicate by signs or by visible representation or otherwise the feelings of hatred against any protected persons or group of protected person in general or specifically or disseminate, broadcast or display any information, advertisement or notice, which may reasonably be construed to demonstrate an intention to propagate hatred or which is likely to expose protected persons to hatred, discrimination or physical violence.

## CHAPTER III

## INFORMED CONSENT

Informed consent for undertaking HIV test or treatment.

**5.** (1) Subject to the provisions of this Act,—

(*a*) no HIV test shall be undertaken or performed upon any person; or

(*b*) no protected person shall be subject to medical treatment, medical interventions or research, except with the informed consent of such person or his representative and in such manner, as may be specified in the guidelines.

(2) The informed consent for HIV test shall include pre-test and post-test counselling to the person being tested or such person's representative in the manner as may be specified in the guidelines.

Informed consent not required for conducting HIV tests in certain cases.

**6.** The informed consent for conducting an HIV test shall not be required—

(*a*) where a court determines, by an order that the carrying out of the HIV test of any person either as part of a medical examination or otherwise, is necessary for the determination of issues in the matter before it;

4. நபர் எவரும், பாதுகாக்கப்பட்ட நபர்கள் அல்லது பாதுகாக்கப்பட்ட நபர்களின் தொகுதியினர் எவருக்கும் எதிராக வெறுப்பு உணர்வுகளை, பேச்சிலோ அல்லது எழுத்திலோ ஆன சொற்களாலோ குறியீடுகளாலோ அல்லது கண்ணுக்குப் புலனாகும் உருவப்படைப்பினாலோ, வெளியிடுதலோ, ஓதிப்பரப்புதலோ, ஆதரவாகப் பேசுதலோ அல்லது பகிர்ந்துகொள்ளுதலோ அல்லது வெறுப்பினைப் வெளிப்படுத்தும் உட்கருத்தினை ஓதிப்பரப்புவதற்காக, தகுமானதாகப் பொருள்கொள்ளப்படும் அல்லது பாதுகாக்கப்பட்ட நபர்களை வெறுப்புக்கு, வேற்றுமை காட்டுவதற்கு அல்லது வலுவந்த வன்முறைக்கு வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கும் தகவல், விளம்பரம் அல்லது அறிவிப்பு எதனையும் பரப்புதலோ, ஒலிப்பரப்புதலோ அல்லது காட்சிப்படுத்துதலோ ஆகாது.

குறித்தசில செயல்களுக்குத் தடை.

## அத்தியாயம் III

## வெளிப்படுத்தப்பட்ட இசைவு

5. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, வழிகாட்டுநெறிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வெளிப்படுத்தப்பட்ட நபர் ஒருவருடைய அல்லது அவருடைய சார்பாற்றுநரின் இசைவின்றி,–

**எச்ஐவி** பரிசோதனை அல்லது சிகிச்சை தொடங்குவதற்காக வெளிப்படுத்தப்பட்ட இசைவு.

(அ) எந்தவொரு நபருக்கும் **எச்ஐவி** பரிசோதனை எதுவும் தொடங்கப்படுதலோ அல்லது செய்யப்படுதலோ ஆகாது; அல்லது

(ஆ) பாதுகாக்கப்பட்டுள்ள நபர் எவரும், மருத்துவ சிகிச்சைக்கோ, மருத்துவ நடைமுறைகளுக்கோ அல்லது ஆராய்ச்சிக்கோ உட்படுத்தப்படுதல் ஆகாது.

(2) **எச்ஐவி** பரிசோதனைக்காகத் வெளிப்படுத்தப்பட்ட இசைவென்பது, வழிக்காட்டுநெறிகளில் குறித்துரைக்கப்படலாகிறவாறு பரிசோதிக்கப்படுகிற அத்தகைய நபருக்கு அல்லது சார்பாற்றுநருக்குக் கொடுக்கப்படும் பரிசோதனைக்கு முந்தைய மற்றும் பரிசோதனைக்குப் பிந்தைய ஆலோசனையை உள்ளடக்கும்.

6. ஒரு **எச்ஐவி** பரிசோதனைக்கான வெளிப்படுத்தப்படும் இசைவானது–

குறித்தசில நேர்வுகளில் **எச்ஐவி** பரிசோதனை நடத்துவதற்கு வெளிப்படுத்தப்படும் இசைவு தேவைப்படுவதில்லை.

(அ) நீதிமன்றம் ஒன்று, அதன் முன்புள்ள பொருட்பாட்டில் எழுவினாக்களை தீர்மானிப்பதற்காக எந்த ஒரு நபருக்கும் ஒரு மருத்துவ ஆய்வின் ஒரு பகுதியாகவோ அல்லது பிறவாறாகவோ **எச்ஐவி** பரிசோதனை செய்வது தேவையென அது ஓர் ஆணையின்வழி தீர்மானிக்கிறவிடத்து;

(*b*) for procuring, processing, distribution or use of a human body or any part thereof including tissues, blood, semen or other body fluids for use in medical research or therapy:

Provided that where the test results are requested by a donor prior to donation, the donor shall be referred to counselling and testing centre and such donor shall not be entitled to the results of the test unless he has received post-test counselling from such centre;

(c) for epidemiological or surveillance purposes where the HIV test is anonymous and is not for the purpose of determining the HIV status of a person:

Provided that persons who are subjects of such epidemiological or surveillance studies shall be informed of the purposes of such studies; and

(d) for screening purposes in any licensed blood bank.

Guidelines for testing centres, etc.

**7.** No HIV test shall be conducted or performed by any testing or diagnostic centre or pathology laboratory or blood bank, unless such centre or laboratory or blood bank follows the guidelines laid down for such test.

## CHAPTER IV

## DISCLOSURE OF HIV STATUS

Disclosure of HIV status.

8. **(**1) Notwithstanding anything contained in any other law for the time being in force,—

(i) no person shall be compelled to disclose his HIV status except by an order of the court that the disclosure of such information is necessary in the interest of justice for the determination of issues in the matter before it;

(ஆ) மருத்துவ ஆராய்ச்சியிலோ அல்லது மருத்துவ சிகிச்சையிலோ பயன்படுத்துவதற்காக திசு, குருதி, விந்து அல்லது பிற உடல் திரவங்கள் உள்ளடங்கலான ஒரு மனித உடல் அல்லது அதன் பகுதி எதையும் பெறுவதற்காகவோ, செயல்முறைப் படுத்துவதற்காகவோ, பகிர்ந்தளிக்கப் படுவதற்காகவோ அல்லது பயன்படுத்துவதற்காகவோ:

**வரம்புரையாக:** கொடையளிப்பதற்கு முன்னர் கொடையளிப்பவர் ஒருவரால் பரிசோதனை முடிவுகள் வேண்டப்படுகிறவிடத்து, கொடையளிப்பவர் ஆலோசனை மற்றும் பரிசோதனை மையத்திற்குப் பரிந்துரைத்து அனுப்பப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய கொடையளிப்பவர் அத்தகைய மையத்திலிருந்து பரிசோதனைக்குப் பிந்தைய ஆலோசனையைப் பெற்றிருந்தாலன்றி பரிசோதனையின் முடிவுகளுக்கு உரிமை கொண்டிருத்தல் ஆகாது;

(இ) **எச்ஐவி** பரிசோதனை, பெயர் வெளிப்படுத்தப்படாததாக இருந்து ஒரு நபருடைய **எச்ஐவி** தொற்றுநிலையை முடிவுசெய்யும் நோக்கத்திற்கு அல்லாததாக இருக்கிறவிடத்து, நோய் பரவல் மற்றும் தடுப்பு அறிவியல் ஆய்வு அல்லது அணுக்கக் கணிப்பு நோக்கங்களுக்காகவோ:

**வரம்புரையாக:** அத்தகைய நோய் பரவல் மற்றும் தடுப்பு அறிவியல் ஆய்வுக்கு அல்லது அணுக்கக் கணிப்பு நோக்கங்களுக்கு உள்ளாகிறவர்களான அந்த நபர்களுக்கு அத்தகைய ஆய்வின் நோக்கங்கள் பற்றி வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) உரிமம் பெற்ற குருதி சேமிப்பகம் எதிலும் நுணுகி பரிசோதனை செய்யும் நோக்கத்திற்காக,

தேவைப்படுதல் ஆகாது.

7. பரிசோதனை அல்லது நோய் கண்டறிதல் மையம் அல்லது நோய்க் குறியியல் ஆய்வுக்கூடம் அல்லது குருதி வைப்பகம் எதுவும், அத்தகைய பரிசோதனைக்காக விதிக்கப்பட்ட வழிகாட்டுநெறிகளைப் பின்பற்றினாலன்றி, அத்தகைய மையம் அல்லது ஆய்வுக் கூடம் அல்லது குருதி சேமிப்பகம் எதனாலும் **எச்ஐவி** பரிசோதனை நடத்தப்படுதலோ அல்லது செய்யப்படுதலோ ஆகாது.

பரிசோதனை மையங்கள் முதலியவற்றிற்கான வழிகாட்டுநெறிகள்.

## அத்தியாயம் IV

## எச்ஐவி தொற்றுநிலை பற்றிய வெளிப்படுத்துகை

8. (1) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,—

**எச்ஐவி** தொற்றுநிலையை வெளிப்படுத்துதல்.

(i) நீதிமன்றம் தனது முன்புள்ள பொருட்பாட்டின் எழுவினாக்களை தீர்மானிப்பதற்காக நீதிமுறை நலத்தின்பொருட்டு ஒருவருடைய **எச்ஐவி** தொற்றுநிலையை வெளிப்படுத்துவது தேவை என்ற அதன் ஓர் ஆணையின் வழி அல்லாமல் எந்த ஒரு நபரையும், அவருடைய **எச்ஐவி** அளவு தொற்றுநிலையை வெளிப்படுத்தும்படி கட்டாயப்படுத்துதல் ஆகாது;

(ii) no person shall disclose or be compelled to disclose the HIV status or any other private information of other person imparted in confidence or in a relationship of a fiduciary nature, except with the informed consent of that other person or a representative of such another person obtained in the manner as specified in section 5, as the case may be, and the fact of such consent has been. recorded in writing by the person making such disclosure:

Provided that, in case of a relationship of a fiduciary nature, informed consent shall be recorded in writing.

(*2*) The informed consent for disclosure of HIV-related information under clause (*ii*) of sub-section (*1*) is not required where the disclosure is made—

(*a*) by a healthcare provider to another healthcare provider who is involved in the care, treatment or counselling of such person, when such disclosure is necessary to provide care or treatment to that person;

(*b*) by an order of a court that the disclosure of such information is necessary in the interest of justice for the determination of issues and in the matter before it;

(*c*) in suits or legal proceedings between persons, where the disclosure of such information is necessary in filing suits or legal proceedings or for instructing their counsel;

(*d*) as required under the provisions of section 9;

(*e*) if it relates to statistical or other information of a person that could not reasonably be expected to lead to the identification of that person; and

(ii) எந்த ஒரு நபரும், இரகசியமாகவோ அல்லது ஒரு பொறுப்பாளர் தன்மையதான ஓர் உறவு நிலையிலோ அளிக்கப்பட்ட பிற நபருடைய **எச்ஐவி** தொற்றுநிலையை அல்லது பிற தனிப்பட்ட தகவல் எதனையும், நேர்வுக்கேற்ப, **5**ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் பெறப்பட்ட அந்தப் பிற நபருடைய அல்லது அத்தகைய வேறொரு நபருடைய சார்பாற்றுநர் எவரின் வெளிப்படுத்தப்பட்ட இசைவுடனன்றி வெளிப்படுத்துதலோ அல்லது வெளிப்படுத்துமாறு கட்டாயப்படுத்துதலோ ஆகாது:

**வரம்புரையாக:** பொறுப்பாளர் தன்மையதான ஓர் உறவு நிலையின் நேர்வில், தகவலில் வெளிப்படுத்தப்பட்ட இசைவானது எழுத்து வடிவில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

**(2). (1)** ஆம் உட்பிரிவின் (ii) ஆம் கூறின்படி **எச்ஐவி** தொடர்புடைய தகவல் பற்றிய வெளிப்படுத்துகையானது **–**

(அ) அந்த நபரின் மருத்துவக் காப்பு, சிகிச்சை அல்லது ஆலோசனை அளிப்பதில் உள்ளாகியிருக்கிறவரான இன்னொரு உடல்நலக் காப்பாளருக்கு அந்த நபரின் மருத்துவக் காப்பு அல்லது சிகிச்சை அளிப்பதற்கு அத்தகைய தகவல் தேவைப்படும்போது ஓர் உடல் நலக் காப்பாளரால்;

(ஆ) நீதிமன்றத்தின் முன்புள்ள எழுவினாக்களையும் அந்த பொருட்பாட்டையும் தீர்மானிப்பதற்காக நீதிமுறைப்பாட்டின் பொருட்டு அத்தகைய தகவலை வெளிப்படுத்துவது தேவை என்றால், ஒரு நீதிமன்றத்தின் ஓர் ஆணையின் வழி;

(இ) நபர்களிடையே உரிமை வழக்குகளை அல்லது சட்ட நடவடிக்கைகளை முன்னிடுவதில் அல்லது அவர்களுடைய வழக்கறிஞர்களை அறிவுறுத்துவதற்கு அத்தகைய தகவலை வெளிப்படுத்துவது தேவைப்படுகிறவிடத்து உரிமை வழக்குகளிலும் சட்ட நடவடிக்கைகளிலும்;

(ஈ) **9** ஆம் பிரிவின் வகையங்களின்படி தேவைப்படுகிறவாறு;

(உ) அது அந்த நபரை அடையாளம் காட்ட வழிவகுப்பதற்கு தகுமான முறையில் எதிர்ப்பார்க்க இயலாத ஒரு நபர் பற்றிய புள்ளி விவர அல்லது பிற தகவல் தொடர்புடையதாக இருக்குமானால்;

(*f*) to the officers of the Central Government or the State Government or State AIDS Control Society of the concerned State Government, as the case may be, for the purposes of monitoring, evaluation or supervision.

Disclosure of HIV-positive status to partner of HIV-positive person.

9. (1) No health care provider, except a physician or a counsellor, shall disclose the HIV-positive status of a person to his or her partner.

(2) A healthcare provider, who is a physician or counsellor, may disclose the HIV-positive status of a person under his direct care to his or her partner, if such healthcare provider—

(a) reasonably believes that the partner is at the significant risk of transmission of HIV from such person; and

(b) such HIV-positive person has been counselled to inform such partner; and

(c) is satisfied that the HIV-positive person will not inform such partner; and

(d) has informed the HIV-positive person of the intention to disclose the HIV positive status to such partner:

Provided that disclosure under this sub-section to the partner shall be made in person after counseling:

Provided further that such healthcare provider shall have no obligation to identify or locate the partner of an HIV-positive person:

(ஊ) கண்காணிக்கும், மதிப்பிடும் அல்லது மேற்பார்வையிடும் நோக்கங்களுக்காக, நேர்வுக்கேற்ப, மைய அரசின் அல்லது மாநில அரசின் அல்லது தொடர்புடைய மாநில அரசின் மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் அலுவலர்களிடம்,

செய்யப்படுகிறவிடத்து தகவலை வெளிப்படுத்துவதற்காக இசைவு தேவைப்படாது.

**எச்ஜவி** தொற்றுநிலை உறுதி பற்றி **எச்ஜவி** உறுதியான நபருடைய கூட்டாளிக்கு வெளிப்படுத்துதல்.

**9. (1)** ஒரு பொது மருத்துவரை அல்லது ஆலோசகரைத் தவிர, உடல் நலக் காப்பாளர் எவரும், ஒரு நபருக்கு உறுதியான **எச்ஜவி** தொற்றுநிலை உறுதியானதை அவருடைய அல்லது அவளுடைய கூட்டாளிக்கு வெளிப்படுத்துதல் ஆகாது.

**(2)** ஒரு பொது மருத்துவராகவோ அல்லது ஆலோசகராகவோ இருப்பவரான ஓர் உடல் நலக் காப்பாளர், அத்தகைய உடல் நலக் காப்பாளர்—

(அ) அத்தகைய நபரிடமிருந்து அந்தக் கூட்டாளி **எச்ஜவி** பரவும் குறிப்பிடத்தக்க ஆபத்தில் இருக்கிறார் என்று தகுமான முறையில் நம்புவாராயின்; மற்றும்

(ஆ) அத்தகைய கூட்டாளிக்குத் தெரிவிக்குமாறு அத்தகைய **எச்ஜவி** உறுதியான நபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்குமாயின்; மற்றும்

(இ) **எச்ஜவி** உறுதியான நபர் அத்தகைய கூட்டாளிக்கு தெரிவிக்கமாட்டார் என்று தெளிவுறக் காண்பாராயின் : மற்றும்

(ஈ) **எச்ஜவி** தொற்றுஉறுதியான நிலையை அத்தகைய கூட்டாளிக்கு வெளிப்படுத்தும் உட்கருத்தினை **எச்ஜவி** உறுதியான நபருக்குத் தெரிவித்திருப்பாராயின்

**எச்ஜவி** தொற்றுஉறுதியான நிலையை அவரின் நேரடிக் கவனிப்பின்கீழ் இருக்கும் கூட்டாளிக்கு வெளிப்படுத்தலாம்:

**வரம்புரையாக:** இந்த உட்பிரிவின்படி கூட்டாளிக்கு வெளிப்படுத்துவதானது ஆலோசனைக்குப்பின்பு, நேரடியாக செய்யப்படுதல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** அத்தகைய உடல்நலக் காப்பாளர், **எச்ஜவி** உறுதியான நபருடைய கூட்டாளியை அடையாளங்காட்டுவதற்கோ அல்லது அவர் இருக்குமிடத்தை அறிவதற்கோ கடமைப்பாடு எதுவும் கொண்டிருத்தல் ஆகாது:

Provided also that such healthcare provider shall not inform the partner of a woman where there is a reasonable apprehension that such information may result in violence, abandonment or actions which may have a severe negative effect on the physical or mental health or safety of such woman, her children, her relatives or someone who is close to her.

(3) The healthcare provider under sub-section (*1*) shall not be liable for any criminal or civil action for any disclosure or non-disclosure of confidential HIV-related information made to a partner under this section.

Duty to prevent transmission of HIV.

10. Every person, who is HIV-positive and has been counselled in accordance with the guidelines issued or is aware of the nature of HIV and its transmission, shall take all reasonable precautions to prevent the transmission of HIV to other persons which may include adopting strategies for the reduction of risk or informing in advance his HIV status before any sexual contact with any person or with whom needles are shared with:

Provided that the provisions of this section shall not be applicable to prevent transmission through a sexual contact in the case of a woman, where there is a reasonable apprehension that such information may result in violence, abandonment or actions which may have a severe negative effect on the physical or mental health or safety of such woman, her children, her relatives or someone who is close to her.

## CHAPTER V

## OBLIGATION OF ESTABLISHMENTS

Confidentiality of data.

11. Every establishment keeping the records of HIV-related information of protected persons shall adopt data protection measures in accordance with the guidelines to ensure that such information is protected from disclosure.

**இன்னும் வரம்புரையாக:** அத்தகைய உடல்நலக் காப்பாளர், ஒரு பெண்ணின் கூட்டாளிக்குத் தகவல் தெரிவிப்பது, அத்தகைய தகவல், அத்தகைய பெண்ணின், அவருடைய சிறார்களின், அவருடைய உறவினர்களின் அல்லது அவருக்கு நெருக்கமாக இருப்பவரான எவரேனுமொருவரின், உடல் அல்லது மன நலன் அல்லது பாதுகாப்பின் மீது ஒரு கடுமையான எதிர்மறை விளைவினைக் கொண்டிருப்பவையான வன்முறை, கைவிடுகை அல்லது செயல்களில் முடியக்கூடும் என்று ஒரு தகுமான அச்சம் இருக்கிறவிடத்து அக்கூட்டாளிக்குத் தகவல் தெரிவித்தல் ஆகாது.

**(3). (1)** ஆம் உட்பிரிவின்படியான உடல் நலக் காப்பாளர், இந்த பிரிவின்படி ஒரு கூட்டாளிக்குச் செய்யப்பட்ட இரகசியமான **எச்ஐவி** தொடர்புடைய தகவல் வெளிப்படுத்துகை அல்லது வெளிப்படுத்தாமை எதற்காகவும் குற்றவழக்கு அல்லது உரிமையியல் நடவடிக்கை எதற்கும் உள்ளாக்கப்படுதல் ஆகாது.

**10. எச்ஐவி** உறுதியானவராகவும் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளின்படி ஆலோசனை கொடுக்கப்பட்டிருப் பவராகவோ அல்லது **எச்ஐவி**யின் தன்மை பற்றியும் அது பரவிவருவதையும் அறிந்திருப்பவராகவோ இருப்பவரான ஒவ்வொரு நபரும், **எச்ஐவி**யை பிற நபர்களுக்குப் பரவுவதைத் தடுப்பதற்கான தகுமான முன்னெச்சரிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுதல் வேண்டும்; அவை ஆபத்தைக் குறைப்பதற்கான உத்திகளை மேற்கொள்ளுதல் அல்லது எந்த ஒரு நபருடனும் பாலியல் உறவு அல்லது எவருடனும் ஊசிகளைப் பரிமாறிக் கொள்ளுதல் எதற்கு முன்பும் அவருடைய **எச்ஐவி** தொற்றுநிலையை முன்னரே தெரிவித்தலை உள்ளடக்கலாம்: எச்ஐவி பரவுவதைத் தடுப்பதற்கான கடமை.

**வரம்புரையாக:** இந்தப் பிரிவின் வகையங்கள், ஒரு பெண்ணின் நேர்வில் அத்தகைய தகவல், அத்தகைய பெண்ணின், அவருடைய சிறார்களின், அவருடைய உறவினர்களின் அல்லது அவருக்கு நெருக்கமாக இருப்பவரான எவரேனுமொருவரின், உடல் அல்லது மன நலன் அல்லது பாதுகாப்பின் மீது ஒரு கடுமையான எதிர்மறை விளைவினைக் கொண்டிருப்பவையான வன்முறை, கைவிடுகை அல்லது செயல்களில் முடியக் கூடும் என்று தகுமான அச்சம் இருக்கிறவிடத்து, ஒரு பாலியல் உறவு மூலமானப் பரவலைத் தடுப்பதற்குப் பொருந்துதல் ஆகாது.

## அத்தியாயம் V

## நிறுவனங்களின் கடமைப்பாடு

**11.** பாதுகாக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றிய **எச்ஐவி** தொடர்பான தகவலுக்குரிய பதிவணங்களை வைத்து வரும் நிறுவனம் ஒவ்வொன்றும், அத்தகைய தகவல் வெளிப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுகிறது என்பதை உறுதி செய்யும்பொருட்டு வழிகாட்டுநெறிகளின்படி தரவுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். தரவின் இரகசியத்தன்மை.

**Explanation.** — For the purpose of this section, data protection measures shall include procedures for protecting information from disclosure, procedures for accessing information, provision for security systems to protect the information stored in any form and mechanisms to ensure accountability and liability of persons in the establishment.

HIV and AIDS policy for establishments.

12. The Central Government shall notify model HIV and AIDS policy for establishments, in such manner, as may be prescribed.

## CHAPTER VI

## ANTI-RETROVIRAL THERAPY AND OPPORTUNISTIC INFECTION MANAGEMENT FOR PEOPLE LIVING WITH HIV

Central Government and State Government to take measures.

13. The Central Government and every State Government, as the case may be, shall take all such measures as it deems necessary and expedient for the prevention of spread of HIV or AIDS, in accordance with the guidelines.

Antiretroviral Therapy and Opportunistic Infection Management by Central Government and State Government.

14. (1) The measures to be taken by the Central Government or the State Government under section 13 shall include the measures for providing, as far as possible, diagnostic facilities relating to HIV or AIDS, Anti-retroviral Therapy and Opportunistic Infection Management to people living with HIV or AIDS.

(2) The Central Government shall issue necessary guidelines in respect of protocols for HIV and AIDS relating to diagnostic facilities, Anti-retroviral Therapy and Opportunistic Infection Management which shall be applicable to all persons and shall ensure their wide dissemination.

**விளக்கம்.–** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, தரவு பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பது, நிறுவனத்தில் உள்ள நபர்களின் பதிலளிக்கும் பொறுப்புடைமையையும் கடப்பாட்டினையும் உறுதி செய்வதற்கு எந்தவொரு வடிவத்திலும் இயங்கு முறையிலும் சேமிக்கப்பட்டுள்ள தகவலைப் பாதுகாப்பதற்கான நெறிமுறைகள், தகவலை அணுகுவதற்கான நெறிமுறைகள், பாதுகாப்பு முறைகளுக்கான வகையம் ஆகியவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

**12.** மைய அரசு, வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய முறையில், நிறுவனங்களுக்கான மாதிரி **எச்ஐவி** மற்றும் எய்ட்ஸ் கொள்கையை அறிவித்தல் வேண்டும்.

நிறுவனங்களுக்கான **எச்ஐவி** மற்றும் எய்ட்ஸ் கொள்கை

## அத்தியாயம் VI

## எச்ஐவியுடன் வாழ்ந்து வரும் மக்களுக்கான நுண்மநோய்த் திரும்பல் எதிர்ப்பு சிகிச்சை மற்றும் மருந்துகாரணமாக நோய்த் தடுப்பாற்றல் குன்றியவர்களுக்கு நோய்த் தொற்று மேலாண்மை

**13.** நேர்வுக்கேற்ப, மைய அரசும், ஒவ்வொரு மாநில அரசும் வழிகாட்டுநெறிகளின்படி, **எச்ஐவி**யும் எய்ட்ஸூம் பரவிவருவதைத் தடுப்பதற்கு அது தேவையெனவும் உகந்ததெனவும் கொள்கிறவாறு அத்தகைய நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

மைய அரசும் மாநில அரசும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

**14. (1).** **13** ஆம் பிரிவின்படி மைய அரசாலோ அல்லது மாநில அரசாலோ மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், கூடுமானவரையில், **எச்ஐவி** அல்லது எய்ட்ஸ் தொடர்பான நோயை அறுதியிடும் வசதிகள், நுண்மநோய்த் திரும்பல் எதிர்ப்புச் சிகிச்சை மற்றும் **எச்ஐவி** மற்றும் எய்ட்ஸூடன் வாழ்ந்து வரும் மக்களுக்கு நோய் அல்லது மருந்து காரணமாக நோய்த் தடுப்பாற்றல் குன்றியவர்களுக்கு, நோய்த் தொற்று மேலாண்மைக்கு வகை செய்வதற்கான நடவடிக்கைகளை உள்ளடக்குதல் வேண்டும்.

நுண்மநோய்த் திரும்பல் எதிர்ப்பு சிகிச்சையும் மருந்துகாரணமாக நோய்த் தடுப்பாற்றல் குன்றியவர்களுக்கு நோய்த் தொற்று மைய அரசாலும் மாநில அரசாலும் மேலாண்மை செய்யப்படுதல்.

**(2)** மைய அரசு, அனைவருக்கும் பொருந்தத்தக்கதாக இருக்கும் நோய் அறுதியிடும் வசதிகள், நுண்மநோய்த் திரும்பல் எதிர்ப்புச் சிகிச்சை மற்றும் மருந்து காரணமான நோய்த் தடுப்பாற்றல் குன்றியவர்களுக்கு நோய்த்தொற்று மேலாண்மை தொடர்பான **எச்ஐவி** மற்றும் எய்ட்ஸூக்கான மருத்துவ பரிசோதனை முன்னேற்பாடுகள் பொறுத்த தேவையான வழிகாட்டுநெறிகளை வழங்குதல் மற்றும் அவற்றின் விரிவான பரப்புதலை உறுதிசெய்தல் வேண்டும்.

## CHAPTER VII

## WELFARE MEASURES BY THE CENTRAL GOVERNMENT AND STATE GOVERNMENT

Welfare measures by Central Government and State Government.

15. (1) The Central Government and every State Government shall take measures to facilitate better access to welfare schemes to persons infected or affected by HIV or AIDS.

(2) Without prejudice to the provisions of sub-section (*1*), the Central Government and State Governments shall frame schemes to address the needs of all protected persons.

Protection of property of children affected by HIV or AIDS.

16. (1) The Central Government or the State Government, as the case may be, shall take appropriate steps to protect the property of children affected by HIV or AIDS for the protection of property of child affected by HIV or AIDS.

(2) The parents or guardians of children affected by HIV and AIDS, or any person acting forprotecting their interest, or a child affected by HIV and AIDS may approach the Child Welfare Committee for the safe keeping and deposit of documents related to the property rights of such child or to make complaints relating to such child being dispossessed or actual dispossession or trespass into such child's house.

***Explanation*.—** For the purpose of this section, "Child Welfare Committee" means a Committee set-up under section 29 of the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2000 . 56/2000.

Promotion of HIV and AIDS related information, education and communication programmes.

17. The Central Government and the State Government shall formulate HIV and AIDS related information, education and communication programmes which are age-appropriate, gender-sensitive, non-stigmatising and non-discriminatory.

Women and children infected with HIV or AIDS.

18. (1) The Central Government shall lay down guidelines for care, support and treatment of children infected with HIV or AIDS.

## அத்தியாயம் VII

## மைய அரசாலும் மாநில அரசாலும் செய்யப்படும் நலப்பாட்டு நடவடிக்கைகள்

**15. (1)** மைய அரசும், ஒவ்வொரு மாநில அரசும் **எச்ஐவி** அல்லது எய்ட்ஸினால் நோய்த் தொற்றுக்குள்ளான அல்லது பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு நலப்பாட்டுத் திட்டங்களை நல்லமுறையில் அணுகும் வாய்ப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். மைய அரசாலும் மாநில அரசாலும் செய்யப்படும் நலப்பாட்டு நடவடிக்கைகள்.

**(2). (1)** ஆம் உட்பிரிவின் வகையங்களுக்குக் குந்தகமின்றி, மைய அரசும், மாநில அரசுகளும் அனைத்துப் பாதுகாக்கப்பட்டுள்ள நபர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்களை வனைதல் வேண்டும்.

**16. (1)** நேர்வுக்கேற்ப, மைய அரசு அல்லது மாநில அரசு, **எச்ஐவி** அல்லது எய்ட்ஸினால் பாதிப்பிற்குள்ளான சிறாரின் சொத்தினைப் பாதுகாப்பதற்காக **எச்ஐவி** அல்லது எய்ட்ஸினால் பாதிக்கப்பட்டுள்ள சிறார்களின் சொத்தினைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். **எச்ஐவி** அல்லது எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் சொத்தினைப் பாதுகாத்தல்.

**(2)** **எச்ஐவி**யினாலும் எய்ட்ஸினாலும் பாதிக்கப்பட்டுள்ள சிறார்களின் பெற்றோர் அல்லது காப்பாளர்கள், அல்லது அவர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காகச் செயலுறும் நபர் எவரும், அல்லது **எச்ஐவி**னாலும், எய்ட்ஸினாலும் பாதிக்கப்பட்டுள்ள ஒரு சிறார் அத்தகைய சிறாரின் சொத்துரிமைகள் தொடர்பான ஆவணங்களைப் பாதுகாத்து வைப்பதற்காகவும், வைப்பீடு செய்வதற்காகவும் அல்லது அத்தகைய சிறாரின் வீட்டுக்கு அத்தகைய சிறாரின் உடைமை பறிபோகிவருவது அல்லது உள்ளபடியேயான உடைமை பறிப்பு அல்லது அதில் ஆக்கிரமிப்பு தொடர்பாக முறையீடுகள் செய்வதற்குச் சிறார் நலக்குழுவினை அணுகலாம்.

**விளக்கம்.–** இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக, ‘‘ சிறார் நலக் குழு’’ என்பது, இளைஞர் நீதிச் (சிறார்களைக் காத்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம், 2000இன் 29 ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட ஒரு குழு என்று பொருள்படும்.

56/2000.

**17.** மைய அரசும், மாநில அரசும் வயதுக்குப் பொருத்தமானவையும், பாலின அடையாளம் இல்லாதவையும் தூண்டுதலுக்கு உட்படாத வடுவற்றவையும், வேற்றுமை காட்டாதவையுமான **எச்ஐவி** மற்றும் எய்ட்ஸ் தொடர்புடைய தகவல், கல்வி, செய்தித்தொடர்பு செயல் திட்டங்களை வகுத்தல் வேண்டும். **எச்ஐவி** மற்றும் எய்ட்ஸ் தொடர்பான தகவல், கல்வி, செய்தித்தொடர்பு மற்றும் செயல் திட்டங்களை மேம்படுத்துதல்.

**18. (1)** மைய அரசு, **எச்ஐவி** அல்லது எய்ட்ஸ் நோய்த்தொற்றுள்ள சிறார்களைக் காப்பதற்கும், ஆதரிப்பதற்கும் சிகிச்சையளிப்பதற்குமான வழிகாட்டுநெறிகளை விதித்தல் வேண்டும். **எச்ஐவி** அல்லது **எய்ட்ஸ்** தொற்றுள்ள பெண்களும் சிறார்களும்.

(2) Without prejudice to the generality of the provisions of sub-section (*1*) and notwithstanding anything contained in any other law for the time being in force, the Central Government, or the State Government as the case may be, shall take measures to counsel and provide information regarding the outcome of pregnancy and HIV-related treatment to the HIV infected women.

(3) No HIV positive woman, who is pregnant, shall be subjected to sterilisation or abortion without obtaining her informed consent.

## CHAPTER VIII

## SAFE WORKING ENVIRONMENT

Obligation of establishments to provide safe working environment.

19. Every establishment, engaged in the healthcare services and every such other establishment where there is a significant risk of occupational exposure to HIV, shall, for the purpose of ensuring safe working environment,—

(i) provide, in accordance with the guidelines,—

(a) Universal Precautions to all persons working in such establishment who may be occupationally exposed to HIV; and

(b) training for the use of such Universal Precautions;

(c) Post Exposure Prophylaxis to all persons working in such establishment who may be occupationally exposed to HIV or AIDS; and

(ii) inform and educate all persons working in the establishment of the availability of Universal Precautions and Post Exposure Prophylaxis.

**(2).** **(1)** ஆம் உட்பிரிவின் வகையங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் மற்றும் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், நேர்வுக்கேற்ப, மைய அரசு அல்லது மாநில அரசு, **எச்ஐவி** நோய்த் தொற்றுள்ள பெண்களுக்கு கருவுற்றதன் விளைவு மற்றும் **எச்ஐவி** தொடர்புடைய சிகிச்சை பொறுத்து ஆலோசனைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதலும் தகவல் வழங்குதலும் வேண்டும்.

**(3)** கருவுற்றவராக இருக்கிற, **எச்ஐவி** உறுதியான பெண் எவரும், அவருடைய வெளிப்படுத்தப்பட்ட இசைவைப் பெறாமல் மலடாக்கும் அறுவை சிகிச்சைக்கோ அல்லது கருக்கலைப்பிற்கோ உட்படுத்தப்படுதல் ஆகாது.

## அத்தியாயம் VIII

## பாதுகாப்பான பணிபுரியும் சூழல்

பாதுகாப்பான பணிபுரியும் சூழலுக்கு வகைசெய்வதற்கு நிறுவனங்களின் கடமைப்பாடு.

**19.** தொழிலகச் சூழலினால் **எச்ஐவி**க்கு ஆட்படலாகும் ஒரு குறிப்பிடத்தக்க ஆபத்து இருக்கிறவிடத்து, உடல் நலக்காப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒவ்வொன்றும் மற்றும் அத்தகைய பிற நிறுவனம் ஒவ்வொன்றும், பாதுகாப்பான பணிபுரியும் சூழலை உறுதி செய்யும் நோக்கத்திற்காக—

(i) வழிகாட்டுநெறிகளின்படி, –

(அ) தொழிலகச் சூழலினால் **எச்ஐவி**க்கு ஆட்படலாகும் அத்தகைய நிறுவனத்தில் பணிபுரியும் நபர்கள் அனைவருக்கும் உலகளாவிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு; மற்றும்

(ஆ) அத்தகைய உலகளாவிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான பயிற்சிகளுக்கு;

(இ) **எச்ஐவி** அல்லது எய்ட்ஸிக்கு தொழிலகச் சூழலினால் ஆட்படலாகும் அத்தகைய நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து நபர்களுக்கும் பின்வெளிப்பாட்டு நோய்த்தொற்றுத் தடுப்பு மருத்துவ முறைக்கு

வகை செய்தல் வேண்டும்; மற்றும்

(ii) உலகளாவிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பின்வெளிப்பாட்டு நோய்த்தொற்றுத் தடுப்பு மருத்துவமுறை இருக்கும் நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து நபர்களுக்கும் தகவல் தெரிவித்து கல்வி புகட்டுதல் வேண்டும்.

General responsibility of establishments.

20. (1) The provisions of this Chapter shall be applicable to all establishments consisting of one hundred or more persons, whether as an employee or officer or member or director or trustee or manager, as the case may be:

Provided that in the case of healthcare establishments, the provisions of this sub-section shall have the effect as if for the words "one hundred or more", the words "twenty or more" had been substituted.

(2) Every person, who is in charge of an establishment, referred to in sub-section (1), for the conduct of the activities of such establishment, shall ensure compliance of the provisions of this Act.

Grievance redressal mechanism.

21. Every establishment referred to in sub-section (*1*) of section 20 shall designate such person, as it deems fit, as the Complaints Officer who shall dispose of complaints of violations of the provisions of this Act in the establishment, in such manner and within such time as may be prescribed.

## CHAPTER IX

## PROMOTION OF STRATEGIES FOR REDUCTION OF RISK

Strategies for reduction of risk.

22. Notwithstanding anything contained in any other law for the time being in force any strategy or mechanism or technique adopted or implemented for reducing the risk of HIV transmission, or any act pursuant thereto, as carried out by persons, establishments or organisations in the manner as may be specified in the guidelines issued by the Central Government shall not be restricted or prohibited in any manner, and shall not amount to a criminal offence or attract civil liability.

***Explanation*.**—For the purpose of this section, strategies for reducing risk of HIV transmission means promoting actions or practices that minimise a person's risk of exposure to HIV or mitigate the adverse impacts related to HIV or AIDS including—

(i) the provisions of information, education and counselling services relating to prevention of HIV and safe practices;

**20. (1)** இந்த அத்தியாயத்தின் வகையங்கள், நேர்வுக்கேற்ப, ஒரு பணியாளராகவோ அல்லது அலுவலராகவோ அல்லது உறுப்பினராகவோ அல்லது இயக்குநராகவோ அல்லது பொறுப்புக்கட்டளையராகவோ அல்லது மேலாளராகவோ, நூறு நபர்களை அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்டிருக்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் பொருந்துவதாகும்: நிறுவனங்களின் பொதுவான பொறுப்பு.

**வரம்புரையாக:** உடல்நலக்காப்பு நிறுவனங்களைப் பொறுத்தவரை, இந்த உட்பிரிவின் வகையங்கள் ''நூறு அல்லது அதற்கு மேற்பட்ட'' என்ற சொற்களுக்கு மாற்றாக, ''இருபது அல்லது அதற்கு மேற்பட்ட'' என்ற சொற்கள் அமைக்கப்பட்டிருந்தாற் போன்று செல்திறம் கொண்டிருத்தல் வேண்டும்.

**(2). (1)** ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அத்தகைய நிறுவனத்தின் நடவடிக்கைகளை நடத்துவதற்காக, நிறுவனம் ஒன்றின் பொறுப்பைக் கொண்ட நபர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு இணங்கி நடப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**21. 20** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும், அது பொருத்தமெனக் கொள்கிறவாறு அத்தகைய நபரை முறையீட்டு அலுவலராக பெயர்குறித்தமர்த்துதல் வேண்டும்; அவர் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய காலத்திற்குள், இந்தச் சட்டத்தின் வகையங்கள் மீறப்படுதல் குறித்த முறையீடுகளை முடிவு செய்தல் வேண்டும். குறைதீர்ப்பு இயங்கமைவு.

## அத்தியாயம் IX

## ஆபத்தைக் குறைப்பதற்கான செயலூக்க உத்திகளை மேம்படுத்துதல்

**22.** அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், **எச்ஐவி**னால் பரவும் ஆபத்தைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் அல்லது செயல்படுத்தப்படும் உத்தி அல்லது இயங்குமுறை அல்லது தொழில்முறை நுட்பம் எதுவும், அல்லது மைய அரசால் வழங்கப்படும் வழிக்காட்டுநெறிகளில் குறித்துரைக்கப்படலாகும் முறையில் நபர்களால், நிறுவனங்களால் அல்லது அமைப்புகளால் நிறைவேற்றப்படுகிறவாறு, அதற்கு இணங்கிய செயல் எதுவும், எந்த ஒரு முறையிலும் கட்டுப்படுத்தப்படுதலோ அல்லது தடைசெய்யப்படுதலோ ஆகாது; மேலும் ஒரு குற்றவியல் குற்றச்செயலுக்கு சமமாக இருத்தலோ அல்லது உரிமையியல் கடப்பாட்டை ஈர்த்தலோ ஆகாது. ஆபத்தைக் குறைப்பதற்கான செயலூக்க உத்திகள்.

**விளக்கம்.–** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, **எச்ஐவி** பரவும் ஆபத்துக்குள்ளாகக்கூடிய நிலையைக் குறைப்பதற்கான செயலூக்க உத்திகள் என்பது,

(i) **எச்ஐவி** தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான தகவல், கல்வி, ஆலோசனை வழங்கல் ஆகியவற்றிற்கு வகை செய்தல்;

(ii) the provisions and use of safer sex tools, including condoms;

(iii) drug substitution and drug maintenance; and

(iv) provision of comprehensive injection safety requirements

***Illustrations***

(a) A supplies condoms to B who is a sex worker or to C, who is a client of B. Neither A nor B nor C can be held criminally or civilly liable for such actions or be prohibited, impeded, restricted or prevented from implementing or using the strategy.

(b) M carries on an intervention project on HIV or AIDS and sexual health information, education and counselling for men, who have sex with men, provides safer sex information, material and condoms to N, who has sex with other men. Neither M nor N can be held criminally or civilly liable for such actions or be prohibited, impeded, restricted or prevented from implementing or using the intervention.

(ii) ஆணுறை உள்ளடங்கலான, பாதுகாப்பான பாலியல் சாதனங்களுக்கு வகைசெய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துதல்;

(iii) போதை மருந்துப் பொருளை மாற்றீடு செய்தல் மற்றும் போதை மருந்துப் பொருளைப் பராமரித்து வருதல்; மற்றும்

(iv) ஊசிபோடுவதற்கான பாதுகாப்புத் தேவைகளுக்கு முழுமையாக வகைசெய்தல்

ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நபரின் எச்ஐவிக்கு ஆட்படும் ஆபத்தை குறைக்கிற அல்லது எச்ஐவி அல்லது எய்ட்ஸ் தொடர்பான எதிர்மறை பாதிப்புகளை மட்டுப்படுத்துகிற மேம்படுத்தும் நடவடிக்கைகள் அல்லது நடைமுறைகள் எனப் பொருள்படும்

**எடுத்துக்காட்டுகள்**

(அ). (அ) என்பவர், ஒரு பாலியல் தொழிலாளராக இருப்பவரான (ஆ) என்பவருக்கு அல்லது (ஆ) என்பவரின் ஒரு வாடிக்கையாளராக இருப்பவரான, (இ) என்பவருக்கு ஆணுறைகள் வழங்குகிறார். (அ) வோ (ஆ) வோ (இ) வோ அத்தகைய செயல்களுக்காக குற்றவியல் முறையில் அல்லது உரிமையியல் முறையில், கடப்பாடுடையவர் ஆகார்; அல்லது அந்த உத்தியைச் செயல்படுத்துவதிலிருந்து அல்லது பயன்படுத்துவதிலிருந்து தடை செய்யப்படுதலோ, தடங்கல் செய்யப்படுதலோ, வரைத்தடை செய்யப்படுதலோ அல்லது தடையூறு செய்யப்படுதலோ இயலாது.

(ஆ). (க) என்பவர், ஆண்களுடன் உடல் உறவுகொள்கிற ஆண்களுக்கான **எச்ஐவி** அல்லது எய்ட்ஸ்-இக்கு ஒரு சிகிச்சைத் திட்டம் நடத்திப் பாலியல் நலவாழ்வுத் தகவலும், கல்வியும் மற்றும் ஆலோசனையும் வழங்கி வருகிறார். ஆண்களிடம் உடலுறவு கொண்டிருக்கிற (ங) என்பவருக்கு பாதுகாப்பான உடலுறவுத் தகவலும், சாதனமும், ஆணுறைகளும் வழங்குகிறார். (க) வோ (ங) வோ அத்தகைய செயல்களுக்காக குற்றவியல் முறையில் அல்லது உரிமையியல் முறையில் கடப்பாடு உடையவர் ஆகார்; அல்லது அந்தச் சிகிச்சை முறையை செயல்படுத்துவதிலிருந்து அல்லது பயன்படுத்துவதிலிருந்து தடை செய்யப்படுதலோ, தடங்கல் செய்யப்படுதலோ, வரைத்தடை செய்யப்படுதலோ அல்லது தடையூறு செய்யப்படுதலோ இயலாது.

(c) X, who undertakes an intervention providing registered needle exchange programme services to injecting drug users, supplies a clean needle to Y, an injecting drug user who exchanges the same for a used needle. Neither X nor Y can be held criminally or civilly liable for such actions or be prohibited, impeded, restricted or prevented from implementing or using the intervention.

(d) D, who carries on an intervention programme providing Opioid Substitution Treatment (OST), administers OST to E, an injecting drug user. Neither D nor E can be held criminally or civilly liable for such actions or be prohibited, impeded, restricted or prevented from implementing or using the intervention.

## CHAPTER X

## APPOINTMENT OF OMBUDSMAN

Appointment of Ombudsman.

23. (1) Every State Government shall appoint one or more Ombudsman,—

(a) possessing such qualification and experience as may be prescribed, or

(*b*) designate any of its officers not below such rank, as may be prescribed, by that Government,

(இ) ஊசி மூலம் போதை மருந்துப் பொருளைச் செலுத்திக் கொள்கிறவர்களுக்கு பதிவுபெற்ற ஊசி பரிமாற்றத் திட்டப் பணிகளுக்கு வகைசெய்கிற சிகிச்சை முறையொன்றை மேற்கொள்பவரான, (ர) என்பவர், ஓர் ஊசி மூலம் போதை மருந்துப் பொருளைச் செலுத்திக் கொள்கிறவரான (ல) என்பவருக்குத் தூய்மையான ஊசி ஒன்றை வழங்குகிறார் அவர் அதனை ஒரு பயன்படுத்தப்பட்ட ஊசிக்காகப் பரிமாற்றம் செய்துகொள்கிறார். (ர) வோ (ல) வோ அத்தகைய செயலுக்காக குற்றவியல் முறையில் அல்லது உரிமையியல் முறையில் கடப்பாடு உடையவர் ஆகார்; அல்லது அந்தச் சிகிச்சை முறையைச் செயல்படுத்துவதிலிருந்து அல்லது பயன்படுத்துவதிலிருந்து தடை செய்யப்படுதலோ, தடங்கல் செய்யப்படுதலோ, வரைத்தடை செய்யப்படுதலோ அல்லது தடையூறு செய்யப்படுதலோ இயலாது.

(ஈ) அபினி மாற்றீட்டுச் சிகிச்சைக்கு (ஓஎஸ்டி) வகை செய்கிற ஒரு சிகிச்சை முறையை நடத்தி வருபவரான (ஈ) என்பவர், ஓர் ஊசி மூலம் போதை மருந்துப்பொருள் செலுத்திக்கொள்ளும் (உ) என்பவருக்கு ஓஎஸ்டி செலுத்துகிறார். (ஈ) யோ (உ) வோ, அத்தகைய செயலுக்காகக் குற்றவியல் முறையில் அல்லது உரிமையியல் முறையில் கடப்பாடு உடையவர் ஆகார்; அல்லது அந்தச் சிகிச்சை முறையை செயல்படுத்துவதிலிருந்து அல்லது பயன்படுத்துவதிலிருந்து தடை செய்யப்படுதலோ, தடங்கல் செய்யப்படுதலோ, வரைத்தடை செய்யப்படுதலோ அல்லது தடையூறு செய்யப்படுதலோ இயலாது.

## அத்தியாயம் X

## முறைமன்ற நடுவரை அமர்த்துதல்

**23. (1)** ஒவ்வொரு மாநில அரசும், – முறைமன்ற நடுவரை அமர்த்துதல்.

(அ) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய தகுதிப்பாடும் பட்டறிவும் கொண்டிருக்கும், அல்லது

(ஆ) அந்த அரசால், வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய படிநிலைக்குக் கீழமையாத அலுவலர்களில் எவரையும் பெயர் குறித்தும்,

to exercise such powers and discharge such functions, as may be conferred on Ombudsman under this Act.

(2) The terms and condition of the service of an Ombudsman appointed under clause (a) of sub-section (1) shall be such as may be prescribed by the State Government.

(3) The Ombudsman appointed under sub-section (1) shall have such jurisdiction in respect of such area or areas as the State Government may, by notification, specify.

Powers of Ombudsman.

24. (1) The Ombudsman shall, upon a complaint made by any person, inquire into the violations of the provisions of this Act, in relation to acts of discrimination mentioned in section 3 and providing of healthcare services by any person, in such manner as may be prescribed by the State Government.

(2) The Ombudsman may require any person to furnish information on such points or matters, as he considers necessary, for inquiring into the matter and any person so required shall be deemed to be legally bound to furnish such information and failure to do so shall be punishable under sections 176 and 177 of the Indian Penal Code). 45 /1860.

(3) The Ombudsman shall maintain records in such manner as may be prescribed by the State Government.

Procedure of complaint.

25. The complaints may be made to the Ombudsman under sub-section (1) of section 24 in such manner, as may be prescribed, by the State Government.

Orders of Ombudsman.

26. The Ombudsman shall, within a period of thirty days of the receipt of the complaint under sub-section (1) of section 24, and after giving an opportunity of being heard to the parties, pass such order, as he deems fit, giving reasons therefor:

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முறைமன்ற நடுவரை இந்தச் சட்டத்தின்படி முறைமன்ற நடுவருக்கு அளிக்கப்படலாகும், அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் அத்தகைய செயற்பணிகளை ஆற்றுவதற்கும் அமர்த்துதல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறின்படி அமர்த்தப்பெற்ற ஒரு முறைமன்ற நடுவருக்குள்ள பணி வரையுரைகளும் வரைக்கட்டுகளும் மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(3) . (1) ஆம் உட்பிரிவின்படி அமர்த்தப்பெற்ற முறைமன்ற நடுவர், மாநில அரசு, அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக் கிறலாகிறவாறு அத்தகைய பரப்பிடம் அல்லது பரப்பிடங்கள் பொறுத்து அத்தகைய அதிகாரவரம்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

24. (1) முறைமன்ற நடுவர், எந்தவொரு நபராலும் செய்யப்படும் முறையீடு ஒன்றின்பேரில், மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், 3 ஆம் பிரிவில் சொல்லப்பட்ட வேற்றுமை காட்டும் செயல்கள் பொறுத்தும் எந்தவொரு நபராலும் உடல்நலக் காப்புப் பணிகளுக்கு வகைசெய்வது பொறுத்தும், இந்தச் சட்டத்தின் வகையங்கள் மீறப்படுவது குறித்தும் விசாரணை செய்தல் வேண்டும். முறைமன்ற நடுவருக்குள்ள அதிகாரங்கள்.

(2) முறைமன்ற நடுவர், பொருட்பாட்டை விசாரணை செய்வதற்காக தான் தேவையெனக் கருதுகிறவாறு, அத்தகைய பொருட்கூறுகள் அல்லது பொருட்பாடுகள் மீது தகவல் அளிக்குமாறு எந்தவொரு நபரையும் வேண்டுறுத்தலாம்; மற்றும், அவ்வாறு வேண்டுறுத்தப்படும் நபர் எவரும் அத்தகைய தகவலை அளிப்பதற்கு சட்டப்படிக் கட்டுப்பட்டவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்,
45 /1860. அவ்வாறு செய்யத் தவறுவதானது இந்தியத் தண்டனைச் சட்டத்தொகுப்பின், 176, மற்றும் 177 ஆகிய பிரிவுகளின்படி தண்டிக்கப்படத்தக்கதாகும்.

(3) முறைமன்ற நடுவர், மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் பதிவணங்களைப் பேணி வருதல் வேண்டும்.

25. 24 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவின்படி முறைமன்ற நடுவரிடம், மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் முறையீடுகள் செய்யப்படலாம். முறையீட்டுக்கான நெறிமுறை.

26. முறைமன்ற நடுவர், 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி முறையீட்டைப் பெற்றதிலிருந்து முப்பது நாள் காலஅளவு ஒன்றுக்குள், மற்றும் தரப்பினர்களுக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்று நல்கிய பின்பு, தான் பொருத்தமெனக் கொள்கிறவாறு, அத்தகைய ஆணையை, அதற்கான காரணங்களைக் கொடுத்துப் பிறப்பித்தல் வேண்டும்: முறைமன்ற நடுவரின் ஆணைகள்.

Provided that in cases of medical emergency of HIV positive persons, the Ombudsman shall pass such order as soon as possible, preferably within twenty-four hours of the receipt of the complaint.

Authorities to assist Ombudsman.

27. All authorities including the civil authorities functioning in the area for which the Ombudsman has been appointed under section 23 shall assist in execution of orders passed by the Ombudsman.

Report to State Government.

28. The Ombudsman shall, after every six months, report to the State Government, the number and nature of complaints received, the action taken and orders passed in relation to such complaints and such report shall be published on the website of the Ombudsman and a copy thereof be forwarded to the Central Government.

## CHAPTER XI

## SPECIAL PROVISIONS

Right of residence.

29. Every protected person shall have the right to reside in the shared household, the right not to be excluded from the shared household or any part of it and the right to enjoy and use the facilities of such shared household in a non-discriminatory manner.

***Explanation*.**—For the purposes of this section, the expression "shared household" means a household where a person lives or at any stage has lived in a domestic relationship either singly or along with another person and includes such a household, whether owned or tenanted, either jointly or singly, any such household in respect of which either person or both, jointly or singly, have any right, title, interest or equity or a household which may belong to a joint family of which either person is a member, irrespective of whether either person has any right, title or interest in the shared household.

**வரம்புரையாக: எச்ஐவி** உறுதியான நபர்களின் அவசர மருத்துவ நிலையின் நேர்வுகளில், முறைமன்ற நடுவர், கூடியவிரைவில், முன்னுரிமை அடிப்படையில் முறையீட்டைப் பெற்றதிலிருந்து இருபத்து நான்கு மணி நேரத்திற்குள், அத்தகைய ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும்.

**27. 23** ஆம் பிரிவின்படி எந்தப் பரப்பிடத்திற்காக முறைமன்ற நடுவர் அமர்த்தப்பெற்றிருக்கிறாரோ அந்தப் பரப்பிடத்தில் செயலுறும் குடியியல் அதிகாரஅமைப்புகள் உள்ளடங்கலான அனைத்து அதிகாரஅமைப்புகளும் முறைமன்ற நடுவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை நிறைவேற்றுவதில் உதவுதல் வேண்டும். அதிகார– அமைப்புகள் முறைமன்ற நடுவருக்கு உதவுதல் வேண்டும்.

**28.** முறைமன்ற நடுவர், ஒவ்வொரு ஆறு மாதத்திற்குப் பின்பு, பெறப்பட்ட முறையீடுகளின் எண்ணிக்கை மற்றும் தன்மை, அத்தகைய முறையீடுகள் பொறுத்து எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் ஆகியவற்றின் அறிக்கையை, மாநில அரசுக்கு அனுப்புதல் வேண்டும் மற்றும் அத்தகைய அறிக்கை, முறைமன்ற நடுவரின் வலைதளத்தில் வெளியிடப்படுதலும் மற்றும் அதன் படி ஒன்று மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும். மாநில அரசுக்கு விவரஅறிக்கை.

## அத்தியாயம் XI

## தனியுறு வகையங்கள்

**29.** பாதுகாக்கப்பட்டுள்ள நபர் ஒவ்வொருவரும், பகிர்ந்து கொள்ளப்படும் குடியிருக்குமிடத்தில் வாழ்வதற்கான உரிமையும், பகிர்ந்து கொள்ளப்படும் இல்லறத்திலிருந்து அல்லது அதன் பகுதி எதிலுருந்தும் ஒதுக்கி வைக்கப்படாமல் இருப்பதற்கான உரிமையும் மற்றும் அத்தகைய பகிர்ந்துகொள்ளப்படும் குடியிருக்குமிடத்தின் வசதிகளை, வேற்றுமைக் காட்டாத முறையில் துய்த்து வருவதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்குமான உரிமையையும் கொண்டிருப்பார். உறைவிடத்திற்கான உரிமை.

**விளக்கம்.–** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, ‘‘பகிர்ந்துகொள்ளப்படும் குடியிருக்குமிடம்’’ என்ற சொற்றொடர், நபர் ஒருவர், தனியாகவோ அல்லது இன்னொரு நபருடன் சேர்ந்தோ ஒரு குடும்ப உறவு நிலையில் எங்கு குடியிருந்து வருகிறாரோ அல்லது எந்தவொரு நிலையிலும் குடியிருந்திருக்கின்றாரோ அந்த ஒரு குடியிருக்குமிடம் என்று பொருள்படும்; மற்றும் எந்தவொரு குடியிருக்குமிடம் பொறுத்து அவ்விருவரில் எவரொருவரும் அல்லது இருவரும், கூட்டாகவோ, தனியாகவோ உரிமை, உரிமைமூலம், உரித்தம் அல்லது தகைமை எதுவும் கொண்டிருக்கின்றனரோ அத்தகைய குடியிருக்குமிடம் எதிலும், அல்லது எந்த ஒரு குடியிருக்குமிடம், கூட்டுக் குடும்பம் ஒன்றுக்குச் சொந்தமாக இருந்து அதற்கு இருவரில் எவரும் பகிர்ந்துகொள்ளப்படும் குடியிருக்குமிடத்தில் உரிமையோ, உரிமைமூலமோ அல்லது உரித்தமோ கொண்டிருந்தோ, ஓர் உறுப்பினராக இருக்கிற ஒரு குடியிருக்குமிடம் எதிலும் கூட்டாகவோ தனியாகவோ சொந்தமாகக் கொண்ட அல்லது வாடகைக்கு எடுக்கப்பட்ட அத்தகைய குடியிருக்குமிடம் ஒன்றை உள்ளடக்கும்.

HIV-related information, education and communication before marriage.

30. The Central Government shall specify guidelines for the provision of HIV-related information, education and communication before marriage and ensure their wide dissemination.

Persons in care or custody of State.

31. (1) Every person who is in the care or custody of the State shall have the right to HIV prevention, counselling, testing and treatment services in accordance with the guidelines issued in this regard.

(2) For the purposes of this section, persons in the care or custody of the State include persons convicted of a crime and serving a sentence, persons awaiting trial, person detained under preventive detention laws, persons under the care or custody of the State under the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2000 , the Immoral Traffic (Prevention) Act, 1956 or any other law and persons in the care or custody of State run homes and shelters.

56/2000.

104/1956.

Recognition of guardianship of older sibling.

32. Notwithstanding anything contained in any law for the time being in force, a person below the age of eighteen but not below twelve years, who has sufficient maturity of understanding and who is managing the affairs of his family affected by HIV and AIDS, shall be competent to act as guardian of other sibling below the age of eighteen years for the following purposes, namely:

(*a*) admission to educational establishments;

(*b*) care and protection;

(*c*) treatment;

(*d*) operating bank accounts;

(*e*) managing property; and

(*f*) any other purpose that may be required to discharge his duties as a guardian.

**30.** மைய அரசு, திருமணத்திற்கு முன்பு **எச்ஐவி** தொடர்பான தகவல், கல்வி மற்றும் விரிவான அளவில் தகவல் தொடர்பு ஆகியவற்றிற்கான வழிகாட்டுநெறிகளைக் குறித்துரைப்பதற்கும் அவற்றை முழுமையாகப் பரப்புவதற்கும் வகை செய்தல் வேண்டும். திருமணத்திற்கு முன்பு **எச்ஐவி** தொடர்பான தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு.

**31. (1)** மாநிலத்தின் காப்பிலோ அல்லது பொறுப்பிலோ இருக்கின்ற ஒவ்வொரு நபரும், இது பொறுத்து எக வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளின்படி **எச்ஐவி** தடுப்பு, ஆலோசனை, பரிசோதனை, மற்றும் சிகிச்சை சேவைகளுக்கான உரிமை கொண்டிருத்தல் வேண்டும். மாநிலத்தின் காப்பில் அல்லது பொறுப்பில் உள்ள நபர்கள்.

**(2)** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, மாநிலத்தின் காப்பிலும் பொறுப்பிலுமுள்ள நபர்கள் என்பது ஒரு குற்றத்திற்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுத் தீர்ப்புத்தண்டனைக்கு உள்ளாகி வரும் நபர்கள், விசாரணைக்குக் காத்திருக்கும் நபர்கள், தடுப்புக் காவல் சட்டங்களின்படி காவலில் வைக்கப்பட்டுள்ள நபர், இளைஞர் நீதி
56/2000. (சிறார்களைப் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம், **2000**,
104/1956. விபச்சாரத் தொழில் ( தடுப்புச்) சட்டம், **1956** அல்லது பிற சட்டம் எதன்படியும் மாநிலத்தின் காப்பிலும் பொறுப்பிலுமுள்ள நபர்கள் மற்றும் மாநிலம் நடத்தும் இல்லங்கள் அல்லது காப்பிடங்களின் காப்பிலும் பொறுப்பிலுமுள்ள நபர்களை உள்ளடக்கும்.

**32.** அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், **எச்ஐவி**யினாலும் எய்ட்ஸினாலும் பாதிக்கப்பட்டுள்ள தன் குடும்பத்தின் அலுவற்பாடுகளை மேலாண்மை செய்துவருபவரும் பதினெட்டு வயதுக்குக் கீழும் ஆனால் பன்னிரெண்டு வயதுக்குக்கீழ் இல்லாதவரும், புரிந்துகொள்வதற்கான போதிய மனப்பக்குவம் பெற்றிருப்பவரான ஒரு நபர், பின்வரும் நோக்கங்களுக்காகப் பதினெட்டு வயதுக்குக் கீழுள்ள பிற உடன் பிறந்தவருக்குக் காப்பாளராகச் செயல்படுவதற்குத் தகுதிறமுள்ளவர் ஆவார், அவையாவன:– உடன்பிறந்த மூத்தவரைக் காப்பாளராக ஏற்பளித்தல்.

(அ) கல்வி நிறுவனங்களில் சேர்த்தல்;

(ஆ) பராமரித்தல் மற்றும் பாதுகாத்து வருதல்;

(இ) சிகிச்சை அளித்தல்;

(ஈ) வங்கிக் கணக்குகளைச் செயல்படுத்துதல்;

(உ) சொத்தினை மேலாண்மை செய்து வருதல்; மற்றும்

(ஊ) ஒரு காப்பாளராக தன் கடமைகளை ஆற்றுவதற்குத் தேவைப்படலாகும் பிற நோக்கம் எதுவும்.

***Explanation*.**—For the purposes of this section, a family affected by HIV or AIDS means where both parents and the legal guardian is incapacitated due to HIV-related illness or AIDS or the legal guardian and parents are unable to discharge their duties in relation to such children.

Living wills for guardianship and testamentary guardianship.

33. **(**1) Notwithstanding anything contained in any law for the time being in force, a parent or legal guardian of a child affected by HIV and 14 AIDS may appoint, by making a will, an adult person who is a relative or friend, or a person below the age of eighteen years who is the managing member of the family affected by HIV and AIDS, as referred to in section 33, to act as legal guardian immediately upon incapacity or death of such parent or legal guardian, as the case may be.

(*2*) Nothing in this section shall divest a parent or legal guardian of their rights, and the guardianship referred to in sub-section (*1*) shall cease to operate upon by the parent or legal guardian regaining their capacity.

(*3*) Any parent or legal guardian of children affected by HIV and AIDS may make a will appointing a guardian for care and protection of such children and for the property that such children would inherit or which is bequeathed through the will made by such parent or legal guardian.

## CHAPTER XII
## SPECIAL PROCEDURE IN COURT

Suppression of identity.

34. **(**1) In any legal proceeding in which a protected person is a party or such person is an applicant, the court, on an application by such person or any other person on his behalf may pass, in the interest of justice, any or all of the following orders, namely:—

**விளக்கம்.–** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, **எச்ஐவி** அல்லது எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பம் என்பது, பெற்றோர் இருவரும் மற்றும் சட்டப்படியான காப்பாளரும் **எச்ஐவி** தொடர்பான நோய் அல்லது எய்ட்ஸ் காரணமாகத் திறனற்றிருக்கிற அல்லது அத்தகைய சிறார் தொடர்பான அவர்களுக்குள்ள கடமைகளை ஆற்றுவதற்குச் சட்டப்படியான காப்பாளரும் பெற்றோரும் இயலாமல் இருக்கிற நிலை என்று பொருள்படும்.

காப்பாளர் நிலைக்கான மற்றும் விருப்புறுதி வழிக்காப்பாளர் நிலைக்கான வாழ்ந்து வருபவர் காப்புறுதி.

**33.** **(1)** அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் **எச்ஐவி**யினாலும் எய்ட்ஸாலும் பாதிக்கப் பெற்றிருப்பவரான ஒரு சிறாரின் பெற்றோர் அல்லது சட்டப்படியான காப்பாளர், விருப்புறுதிஆவணம் ஒன்றை உருவாக்குவதன் மூலமாக, **33** ஆம் பிரிவில் சுட்டப்பட்டவாறு, உறவினராகவோ நண்பராகவோ இருப்பவரான வயது வந்த நபர் ஒருவரை, அல்லது **எச்ஐவி**யினாலும் எய்ட்ஸினாலும் பாதிக்கப்பட்ட குடும்பத்தை மேலாண்மை செய்யும் உறுப்பினராக இருக்கின்ற பதினெட்டு வயதுக்குக் கீழுள்ள ஒரு நபரை, நேர்வுக்கேற்ப, அத்தகைய பெற்றோரோ அல்லது காப்பாளரோ திறனற்றவராவதன் அல்லது இறப்பின் பேரில் உடனடியாகச் சட்டப்படியான காப்பாளராகச் செயல்படுவதற்கு அமர்த்தலாம்.

**(2)** இந்தப் பிரிவிலுள்ள எதுவும், ஒரு பெற்றோருக்குள்ள அல்லது சட்டப்படியான காப்பாளருக்குள்ள உரிமைகளை அகற்றிவிடுவதாக இருத்தல் ஆகாது, மற்றும் பெற்றோரோ அல்லது காப்பாளரோ அவர்களுக்கான திறனைத் திரும்பப் பெறுவதன்பேரில், **(1)** ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட காப்பாளர் செயல்படுவது அற்றுப்போதல் வேண்டும்.

**(3)** **எச்ஐவி**யினாலும் **எய்ட்ஸினாலும்** பாதிக்கப்பட்ட, சிறார்களின் பெற்றோர் அல்லது சட்டப்படியான காப்பாளர் எவரும், அத்தகைய சிறார்களைப் பராமரிப்பதற்காகவும், பாதுகாப்பதற்காகவும், அத்தகைய சிறார்கள் வாரிசுரிமைப்படி பெறக்கூடிய அல்லது அத்தகைய பெற்றோர் அல்லது சட்டப்படியான காப்பாளரால் செய்யப்பட்ட விருப்புறுதிஆவணம் வழி கொடையளிக்கப்பட்ட சொத்தினைப் பராமரிப்பதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் ஒரு காப்பாளரை அமர்த்தி விருப்புறுதிஆவணம் ஒன்றைச் செய்யலாம்.

## அத்தியாயம் XII

## நீதிமன்றத்தில் சிறப்பு நெறிமுறை

அடையாளத்தை மறைத்து வைத்தல்.

**34.** **(1)** பாதுகாக்கப்பட்டுள்ள நபர் ஒரு தரப்பினராக இருக்கிற அல்லது அத்தகைய நபர் ஒரு விண்ணப்பத்தாரராக இருக்கிற சட்ட நடவடிக்கை எதிலும், நீதிமன்றம், அத்தகைய நபராலோ அல்லது அவர் சார்பாக பிற நபர் எவராலுமோ செய்யப்படும் விண்ணப்பம் ஒன்றின் பேரில், நீதிமுறை நலப்பாட்டின் பொருட்டு, பின்வரும் ஆணைகள் அனைத்தும் அல்லது அவற்றில் எதனையும் பிறப்பிக்கலாம், அவையாவன:

(a) that the proceeding or any part thereof be conducted by suppressing the identity of the applicant by substituting the name of such person with a pseudonym in the records of the proceedings in such manner as may be prescribed;

(b) that the proceeding or any part thereof may be conducted in camera;

(c) restraining any person from publishing in any manner any matter leading to the disclosure of the name or status or identity of the applicant.

(2) In any legal proceeding concerning or relating to an HIV-positive person, the court shall take up and dispose of the proceeding on priority basis.

Maintenance applications.

35. In any maintenance application filed by or on behalf of a protectedperson under any law for the time being in force, the court shall consider the application for interim maintenance and, in passing any order of maintenance, shall take into account the medical expenses and other HIV-related costs that may be incurred by the applicant.

Sentencing.

36. In passing any order relating to sentencing, the HIV-positive status of the persons in respect of whom such an order is passed shall be a relevant factor to be considered by the court to determine the custodial place where such person shall be transferred to, based on the availability of proper healthcare services at such place.

## CHAPTER XIII
## PENALTIES

Penalty for contravention.

37. Notwithstanding any action that may be taken under any other law for the time being in force, whoever contravenes the provisions of section 4 shall be punished with imprisonment for a term which shall not be less than three months but which may extend to two years and with fine which may extend to one lakh rupees, or with both.

(அ) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், நடவடிக்கைகளின் பதிவணங்களில் அத்தகைய நபருடைய பெயரை ஒரு புனைப் பெயர் கொண்டு மாற்றீடு செய்து விண்ணபத்தாரரின் அடையாளத்தை மறைத்து அந்த நடவடிக்கையோ அல்லது அதன் பகுதி எதுவுமோ நடத்தப்படுதல்;

(ஆ) நடவடிக்கையோ அல்லது அதன் பகுதி எதுவுமோ தனி அறைக்குள் நடத்தப்படலாம்;

(இ) விண்ணப்பதாரரின் பெயரையோ அல்லது தகுநிலையையோ அல்லது அடையாளத்தையோ வெளிப்படுத்த வழிவகுக்கும் பொருட்பாடு எதனையும் எந்தவொரு முறையிலும் வெளியிடுவதிலிருந்து நபர் எவரையும் கட்டுப்படுத்தி வைத்தல்.

(2) **எச்ஐவி** உறுதியான நபரின் நலம்சார்ந்த அல்லது அவருக்குத் தொடர்புடைய சட்ட நடவடிக்கை எதனையும், நீதிமன்றம், முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொண்டு நடவடிக்கையை முடிவு செய்தல் வேண்டும்.

வாழ்க்கைப்படி உதவிக்கான விண்ணப்பங்கள்.

**35.** அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் பாதுகாக்கப்பட்ட நபர் ஒருவராலோ அல்லது அவர் சார்பாகவோ முன்னிடப்பட்ட வாழ்க்கைப்படியுதவிக்கான விண்ணப்பம் எதிலும், நீதிமன்றம், இடைக்கால வாழ்க்கைப் படியுதவிக்கான விண்ணபத்திற்கு ஓர்வு செய்தல் வேண்டும்; மற்றும், வாழ்க்கைப்படியுதவிக்கான ஆணை எதுவும் பிறப்பிக்கையில், விண்ணப்பத்தாரரால் ஏற்க நேரிடலாகும் மருத்துவச் செலவுகளையும் **எச்ஐவி** தொடர்பான பிற செலவுத் தொகைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

தீர்ப்புத்தண்டனை விதித்தல்.

**36.** தீர்ப்புத்தண்டனைத் தொடர்பான ஆணை எதுவும் பிறப்பிக்கையில், எந்த நபர் பொறுத்து அத்தகைய ஆணையொன்று பிறப்பிக்கப்படுகிறதோ அந்த நபருடைய **எச்ஐவி** தொற்று உறுதியான நிலையானது, அத்தகைய நபர் மாற்றப்படவேண்டிய அத்தகைய சிறைக்காவல் இடத்தில் முறையான உடல்நலக் காப்புச் சேவைகள் இருப்பதன் அடிப்படையில், எங்கு காவலில் வைக்கப்பட வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கு, நீதிமன்றம் கருத்தில் கொள்ளப்படவேண்டிய ஒரு தொடர்புற்ற காரணியாக இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் XIII

## தண்டனைகள்

மீறுகைக்கான தண்டனைகள்.

**37.** அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியும் எடுக்கப்படலாகும் நடவடிக்கை எது எவ்வாறு இருப்பினும், **4** ஆம் பிரிவின் வகையங்களை மீறுபவர் எவராயினும், மூன்று மாதத்திற்குக் குறைவாக இருக்கலாகாத ஆனால் இரண்டு ஆண்டு வரை நீடிக்கலாகும் ஒரு காலவரைக்குச் சிறைத் தண்டனை விதித்தும் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்தும், அல்லது அவை இரண்டும் விதித்தும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

Penalty for failure to comply with orders of Ombudsman.

38. Whoever fails to comply with any order given by an Ombudsman within such time as may be specified in such order, under section 26, shallbe liable to pay a fine which may extend to ten thousand rupees and in case the failure continues, with an additional fine which may extend to five thousand rupees for every day during which such failure continues.

Penalty for breach of confidentiality in legal proceedings.

39. Notwithstanding any action that may be taken under any law for the time being in force, whoever discloses information regarding the HIV status of a protected person which is obtained by him in the course of, or in relation to, any proceedings before any court, shall be punishable with fine which may extend to one lakh rupees unless such disclosure is pursuant to any order or direction of a court.

Prohibition of victimisation.

40. No person shall subject any other person or persons to any detriment on the ground that such person or persons have taken any of the following actions, namely:—

(a) made complaint under this Act;

(b) brought proceedings under this Act against any person;

(c) furnished any information or produced any document to a person exercising or performing any power or function under this Act; or

(d) appeared as a witness in a proceeding under this Act.

Court to try offences.

41. No court other than the court of a Judicial Magistrate First Class shall take cognizance of an offence under this Act.

Offences to be cognizable and bailable.

42. Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973 , offences under this Act shall be cognizable and bailable. 2 /1974.

**38.** **26** ஆம் பிரிவின்படி, முறைமன்ற நடுவர் ஒருவரால் வழங்கப்படும் ஆணை எதற்கும் அவ்வாணையில் குறித்துரைக்கபடலாகும் இணங்கி நடக்கத் தவறுகிறவர் எவராயினும், பத்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதம் ஒன்றைச் செலுத்துவதற்கும் மற்றும் தவறுகை தொடர்கிற நேர்வில், அத்தகைய தவறுகை தொடர்கிற ஒவ்வொரு நாளுக்கும் ஐயாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் ஒருகூடுதல் அபராதம் செலுத்துவதற்கும் உள்ளாதல் வேண்டும். முறைமன்ற நடுவரின் ஆணைகளுக்கு இணங்கி நடக்கத் தவறுவதற்கான தண்டனை.

**39.** அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் எடுக்கப்படலாகும் நடவடிக்கை எது எவ்வாறு இருப்பினும், நீதிமன்றம் எதன் முன்பும் உள்ள நடவடிக்கை எதன்போதும், அல்லது அது தொடர்பாகத் தன்னால் பெறப்பட்டதான பாதுகாக்கப்பட்டுள்ள நபர் ஒருவரின் **எச்ஐவி** தொற்றுநிலை பொறுத்த தகவலை வெளிப்படுத்துகிறவர் எவராயினும், அத்தகைய வெளிப்படுத்துகை நீதிமன்றம் ஒன்றின் ஆணை அல்லது பணிப்புரை எதற்கும் இணங்கியவாறு இல்லாமல் இருந்தால், ஒரு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார். சட்ட நடவடிக்கையில் இரகசியத் தன்மையை மீறுவதற்கான தண்டனை.

**40.** எந்த ஒரு நபரும் பிற நபர் அல்லது நபர்கள் எவரையும் அத்தகைய நபர் அல்லது நபர்கள் பின்வரும் நடவடிக்கைகளில் எதனையும் எடுத்திருக்கின்றனர் என்ற காரணத்தின் பொருட்டுத் தீங்கு எதற்கும் உள்ளாக்குதல் ஆகாது, அவையாவன: பழிவாங்குவதற்குத் தடை.

(அ) இந்தச் சட்டத்தின்படி முறையீடு செய்யப்பட்டமை;

(ஆ) எந்தவொரு நபருக்கும் எதிராக இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கைகள் கொண்டுவரப்பட்டமை ;

(இ) இந்தச் சட்டத்தின்படி அதிகாரம் அல்லது செயற்பணி எதுவும் செலுத்துகிற அல்லது புரிந்து வருகிற ஒரு நபருக்கு தகவல் எதுவும் அளிக்கப்பட்டமை; அல்லது ஆவணம் எதுவும் முன்னிட்டமை; அல்லது

(ஈ) இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கையொன்றில் ஒரு சான்றளிப்பவராக முன்னிலையானமை.

**41.** நீதித்துறை முதல் வகுப்புக் குற்றவியல்நடுவர் ஒருவரின் நீதிமன்றம் அல்லாத பிற நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படி ஒரு குற்றச்செயலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது. நீதிமன்றம் குற்றச் செயல்களை விசாரணை செய்தல்.

2/1974. **42.** குற்றவியல் நடைமுறைச் சட்டத்தொகுப்பு, **1973** இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்கள் பிடியாணையின்றி கைது செய்வதற்கும் பிணையில் விடுவதற்கும் உரியவை ஆகும். குற்றச்செயல்கள் பிடியாணையின்றி கைது செய்வதற்கும் பிணையில் விடுவதற்கு–மானதாகும்.

## CHAPTER XI

## MISCELLANEOUS

Act to have overriding effect.

43. The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time in force or in any instrument having effect by virtue of any law other than this Act.

Protection of action taken in good faith.

44. No suit, prosecution or other legal proceeding shall lie against the Central Government, the State Government, the Central Government or AIDS Control Society of the State Government Ombudsman or any member thereof or any officer or other employee or person acting under the direction either of the Central Government, the State Government, the Central Government, or Ombudsman in respect of anything which is in good faith done or intended to be done in pursuance of this Act or any rules or guidelines made thereunder or in respect of the publication by or under the authority of the Central Government, the State Government, the Central Government or AIDS Control Society of the State Government Ombudsman.

Delegation of powers.

45. The Central Government and State Government, as the case may be, may, by general or special order, direct that any power exercisable by it under this Act shall, in such circumstances and under such conditions, if any, as may be mentioned in the order, be exercisable also by an officer subordinate to that Government or the local authority.

Guidelines.

46. (1) The Central Government may, by notification, make guidelines consistent with this Act and any rules thereunder, generally to carry out the provisions of this Act.

(2) In particular and without prejudice to the generality of the foregoing power, such guidelines may provide for all or any of the following matters, namely:—

(a) information relating to risk and benefits or alternatives to the proposed intervention under clause (n) of section 2;

(b) the manner of obtaining the informed consent under sub-section (1) and the manner of pre test and post test counselling under sub-section (2) of section 5;

## அத்தியாயம் XIV

### பல்வகை

**43.** இந்தச் சட்டத்தின் வகையங்கள், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும், அல்லது இந்தச் சட்டம் அல்லாத பிற சட்டம் எதன் வழியிலும் செல்திறம் கொண்டிருக்கும் முறையாவணம் எதிலும், அவற்றிற்கு முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், செல்திறம் பெறுதல் வேண்டும். சட்டம் மீதூர்ந்தியங்கும் செல்திறம் பெறும்.

**44.** இந்தச் சட்டத்திற்கு அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது வழிகாட்டுநெறிகள் அல்லது இதன் தொடர்பாக வெளியிடப்பட்டவை எதற்கும் இணங்க, அல்லது மைய அரசின், மாநில அரசின், மைய அரசின் அல்லது மாநில அரசின் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் முறைமன்ற நடுவரின் அதிகாரத்தாலோ, அதன் வழியாலோ நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனையும் பொறுத்து மைய அரசுக்கு, மாநில அரசுக்கு, மைய அரசின் அல்லது மாநில அரசின் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் முறைமன்ற நடுவர் அல்லது அதன் உறுப்பினர் எவருக்கும், எதிராக அல்லது மைய அரசு, மாநில அரசு, மைய அரசின் அல்லது முறைமன்ற நடுவர் பணிப்புரையின்படி செயலுறும் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கோ, குற்ற வழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கையோ எடுப்பதற்கு உற்றது ஆகாது. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**45.** நேர்வுக்கேற்ப, மைய அரசும் மாநில அரசும், பொதுவான அல்லது சிறப்பு ஆணையின் வழி, அதனால் இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க அதிகாரம் எதுவும், அந்த ஆணையில் குறிப்பிடப்படலாகும், சூழ்நிலைகள் அல்லது வரைக்கட்டுகள், எவையேனுமிருப்பின், அத்தகைய சூழ்நிலைகளிலும் அத்தகைய வரைக்கட்டுகளின்படியும், அந்த அரசுக்கு அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பிற்குக் கீழமைந்த ஓர் அலுவலராலும் கூட செலுத்தத்தக்கதாகும் என்று பணிக்கலாம். அதிகாரங்கள் ஒப்படைவு.

**46.** (1) மைய அரசு, அறிவிக்கை வாயிலாக, பொதுவாக இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்கு இந்தச் சட்டத்துடன் முரண்படாத வழிகாட்டுநெறிகளைச் செய்யலாம். வழிகாட்டு நெறிகள்.

(2) குறிப்பாகவும் மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப் பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய வழிகாட்டுநெறிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:-

(அ) 2 ஆம் பிரிவின் (ங) கூறின்படி உத்தேசிக்கப்பட்ட சிகிச்சை முறையின் ஆபத்து மற்றும் நலப்பயன்கள் தொடர்பான தகவல் அல்லது அதற்கு

(ஆ) (1) ஆம் உட்பிரிவின்படி வெளிப்படுத்தப்பட்ட இசைவு பெறும்முறை மற்றும் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படியான பரிசோதனைக்கு முந்தைய மற்றும் பரிசோதனைக்குப் பிந்தைய ஆலோசனையின் முறை;

(c) guidelines to be followed by a testing or diagnostic centre or pathology laboratory or blood bank for HIV test under section 7;

(*d*) the manner of taking data protection measures under section 11;

(*e*) guidelines in respect of protocols for HIV/AIDS relating to Anti-retroviral Therapy and Opportunistic Infections Management under sub-section (*2*) of section 14;

(*f*) care, support and treatment of children infected with HIV or AIDS under sub-section (*1*) of section 18;

(*g*) guidelines for Universal Precautions and post exposure prophylaxis under section 19;

(*h*) manner of carrying out the strategy or mechanism or technique for reduction of risk of HIV transmission under section 22;

(*i*) manner of implementation of a drugs substitution, drug maintenance and needle and syringe exchange programme under section 22;

(*j*) provision of HIV-related information, education and communication before marriage under section 30;

(*k*) manner of HIV or AIDS prevention, counselling, testing and treatment of persons in custody under section 31;

(*l*) any other matter which ought to be specified in guidelines for the purposes of this Act.

Power of Central Government to make rules.

47. **(**1) The Central Government may, by notification, make rules to carry out the provisions of this Act.

(இ) 7 ஆம் பிரிவின்படி **எச்ஐவி** பரிசோதனைக்காக பரிசோதனை அல்லது நோய் கண்டறிதல் மையத்தாலோ அல்லது நோய்க் குறியியல் ஆய்வுக்கூடத்தாலோ அல்லது குருதி வங்கியாலோ பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டுநெறிகள்;

(ஈ) 11 ஆம் பிரிவின்படி தரவு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் முறை;

(உ) 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி நுண்மநோய்த்திரும்பல் எதிர்ப்புச் சிகிச்சை மற்றும் நோய் மற்றும் மருந்து காரணமான நோய்த் தடுப்பாற்றல் குன்றியவர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய நோய்த் தொற்று மேலாண்மை தொடர்பான **எச்ஐவி** எய்ட்ஸுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பான வழிகாட்டுநெறிகள்;

(ஊ) 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி **எச்ஐவி** அல்லது எய்ட்ஸ் நோய்த் தொற்றுள்ள சிறார்களைக் காத்தல், ஆதரித்தல் மற்றும் சிகிச்சை அளித்தல்;

(எ) 19 ஆம் பிரிவின்படி உலகளாவிய முன்னெச்சரிக்கைகள் மற்றும் பின்வெளிப்பாட்டு நோய்த்தொற்றுத் தடுப்பு மருத்துவமுறைக்கான வழிகாட்டுநெறிகள்;

(ஏ) 22 ஆம் பிரிவின்படி **எச்ஐவி** பரவும் ஆபத்தைக் குறைப்பதற்கான செயலூக்க உத்தி அல்லது இயங்குமுறை அல்லது தொழில்முறை நுட்பத்தை நிறைவேற்றுமுறை;

(ஐ) 22 ஆம் பிரிவின்படி போதை மருந்துப் பொருள்கள் மாற்றீடு, போதை மருந்துப்பொருள் பேணுகை மற்றும் ஊசி மற்றும் விசைப்பீற்று மருந்தூசி பரிமாற்றம் செயல்படுத்தும்முறை;

(ஒ) 30 ஆம் பிரிவின்படி திருமணத்திற்கு முன்பு **எச்ஐவி** தொடர்பான தகவல், கல்வி மற்றும் தகவல்தொடர்புக்கு வகைசெய்தல்;

(ஓ) 31 ஆம் பிரிவின்படி காப்பிலுள்ள நபர்களுக்கு **எச்ஐவி** அல்லது எய்ட்ஸ் தடுப்புமுறை, ஆலோசனை, பரிசோதனை மற்றும் சிகிச்சை முறை;

(ஔ) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வழிகாட்டுநெறிகளில் குறித்துரைக்கப்பட வேண்டிய பிற பொருட்பாடு எதுவும்.

விதிகள் செய்வதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம்.

**47.** **(1)** மைய அரசு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்கு விதிகளைச் செய்யலாம்.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing provision, such rules may provide for all or any of the following matters, namely:—

(*a*) manner of notifying model HIV or AIDS policy for the establishments under section 12;

(*b*) any other matter which may be or ought to be prescribed by the Central Government.

Laying of rules before both Houses of Parliament.

48. Every rule made under this Act shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive session aforesaid, both Houses agree in making any modification in the rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

Power of State Government to make rules and laying thereof.

49. (1) The State Government may, by notification, make rules for carrying out the provisions of this Act.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:—

(a) measures to provide diagnostic facilities relating to HIV or AIDS, Antiretroviral Therapy and Opportunistic Infection Management to people living with HIV or AIDS and for the prevention of spread of HIV or AIDS in accordance with the guidelines under section 14;

**(2)** குறிப்பாகவும், மேலே கண்ட வகையத்தின் பொதுப் பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம், அவையாவன:

(அ) **12** ஆம் பிரிவின்படி நிறுவனங்களுக்கு **எச்ஐவி** அல்லது எய்ட்ஸ் முன்மாதிரி கொள்கையை அறிவிக்கை செய்யும் முறை;

(ஆ) மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அல்லது வகுத்துரைக்கப்பட வேண்டிய பிற பொருட்பாடு எதுவும்.

விதிகளை நாடாளுமன்ற ஈரவைகளின் முன்பும் வைத்தல்.

**48.** இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் ஒவ்வொரு விதியும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது முப்பது நாட்களைக் கொண்ட ஒரு மொத்த காலஅளவிற்கு, ஒரு கூட்டத் தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத் தொடர்களாகவோ அமர்வில் இருக்கையில் அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்தக் கூட்டத் தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக் கொள்ளுமாயின், அதன் பின்பு அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும், அல்லது நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

விதிகள் செய்வதற்கும் அவற்றை மாநிலச் சட்டமன்றத்தில் வைப்பதற்குமான அதிகாரம்.

**49. (1)** மாநில அரசு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

**(2)** குறிப்பாகவும், மேலேகண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம், அவையாவன:

(அ) **14** ஆம் பிரிவின்படியான வழிகாட்டு நெறிகளின்படி **எச்ஐவி** அல்லது எய்ட்ஸ் தொடர்பான நோய் அறுதியிடும் வசதிகள் **எச்ஐவி** அல்லது எய்ட்ஸுடன் வாழ்ந்து வரும் மக்களுக்கு நுண்மநோய்த் திரும்பல் எதிர்ப்புச் சிகிச்சை மற்றும் மருந்து காரணமாக நோய்த் தடுப்பாற்றல் குன்றியவர்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய நோய்த்தொற்று மேலாண்மைக்கு வகைசெய்தல் மற்றும் **எச்ஐவி** அல்லது எய்ட்ஸ் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்;

(b) qualification and experience for the appointment of a person as an Ombudsman under clause (a) or rank of officer of the State Government to be designated as Ombudsman under clause (b) of sub-section (1) of section 23;

(c) terms and conditions of services of Ombudsman under sub-section (2) of section 23;

(d) manner of inquiring into complaints by the Ombudsman under sub-section (1) and maintaining of records by him under sub-section (3) of section 24;

(e) manner of making the complaints to the Ombudsman under section 25; and

(f) manner of recording pseudonym in legal proceedings under clause (a) of sub-section (1) of section 34.

(3) Every rule made by the State Government under this Act shall be laid, as soon as may be, after it is made before the Legislature of that State.

Power to remove difficulties.

50. (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by order published in the Official Gazette, make such provisions, not inconsistent with the provisions of this Act, as may appear to be necessary for removing the difficulty:

Provided that no order shall be made under this section after the expiry of the period of two years from the date of commencement of this Act.

(2) Every order made under this section shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament.

(ஆ) 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறின்படி ஒருவரை முறைமன்றநடுவராக அமர்த்துவதற்கான தகுதிப்பாடு மற்றும் பட்டறிவு அல்லது (ஆ) கூறின்படி முறைமன்றநடுவராகக் பெயர்குறித்தமர்த்தப்படவேண்டிய மாநில அரசு அலுவலரின் படிநிலை;

(இ) 23 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி முறைமன்றநடுவருக்கான பணிவரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள்;

(ஈ) 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி முறைமன்றநடுவரால் முறையீடுகளை விசாரணை செய்வதற்கானமுறை மற்றும் (3) ஆம் உட்பிரிவின்படி அவரால் பதிவணங்களைப் பேணிவருவதற்கான முறை;

(உ) 25 ஆம் பிரிவின்படி முறைமன்றநடுவரிடம் முறையீடுகள் செய்வதற்கான முறை;

(ஊ) 34 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறின்படி சட்ட நடவடிக்கைகளில் புனைப்பெயரைப் பதிவு செய்யும் முறை;

(3) இந்தச் சட்டத்தின்படி மாநில அரசால் செய்யப்படும் விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், அந்த மாநிலச் சட்ட மன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

50. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணையின்வழி, அந்த இடர்ப்பாட்டினை அகற்றுவதற்குத் தேவையெனத் தோன்றலாகும், இந்தச் சட்டத்தின் வகையங்களுடன் முரண்படாத, அத்தகைய வகையங்களைச் செய்யலாம்:

**வரம்புரையாக:** இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலஅளவு கழிவுற்ற பின்பு, இந்தப் பிரிவின்படி ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

குறிப்புகள்:

குறிப்புகள்:

அரசு மைய அச்சகம் , சென்னை –600 001.